Registered as a newes paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 31 ஆம் நாள் துல்கஃதா 18 (13-4-63) சனிக்கிழமை இதழ் 64

# பூர்வாங்க பேச்சு; பின் சர்வகட்சி மகாநாடு

## மொழிப் பிரச்னை தீர நடேசபிள்ளை முயற்சி

## விரைவில் பிரதமரை சந்திப்பார்

யாழ்ப்பாணம், சனி

**தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமை சம்பந்தமாக வருடப்பிறப்புக் கொண்டாட்டங்கள் முடிவடைந்ததும் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுடன் புதிய செனட்டர் திரு.சு. நடேசபிள்ளை பூர்வாங்கமாக பேச்சுவார்தை நடத்தவிருக்கிறார்.**

### நடேசபிள்ளை தரும் விளக்கம்

"இப்பொழுதுள்ள மொழிச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்யவேண்டுமென்று பிரதமரை நாம் கேட்பதற்கில்லை. அவரும் இதற்குச் சம்மதித்துப் பேசுச்சுக்கள் நடத்த முன் வருவாரென்று எதிர்பார்க்க முடியாது. ஆனல் இப்போதுள்ள சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு, தமிழ் பேசும் மக்களுக்கு மொழி முதலிய நியாயமான உரிமைகளை வழங்கவும், அவரது கணவனுர் இவ் விஷயமாக அளித்த உறுதி மொழிகளை, எவ்விதம் நிறைவேற்ற பிரதமர் உத்தேசித்துள்ளார் என்பதையும் முதலில் அவரிடம் கேட்டு அறிய உத்தேசித்திருக்கிறேன்.

புதுவருடப் பிறப்புக்குப் பின் இவ்விஷயமாக பிரதமரை நேரில் சந்தித்துப் பேசி தமிழரின் கோரிக்கைகளை அவ எவ்வளவு தூரம் வழங்கத் தயாராக இருக்கிருரென்பதை முதலில் அறிய முயுல்வேன். இதற்குமேல் தமிழர் பெறக்கூடியது எதுவுமிருந்தால் சர்வகட்சி மகாநாடு கூட்டி அதைப்பற்றி முடிவு செய்ய முயலலாம். சிங்கள பொதுமக்களைத் தமிழருக்கு நியாயம் வழங்கும்படி நாம் கேட்கவேண்டும். அவர்களுடைய பிரதிநிதிகள்தான் சட்டம் செய்யக்கூடிய அதிகாரம் வகிக்கின்ருர்கள்."

கொழும்பிலிருந்து நேற்று செனட்டர் நடேசபிள்ளை யாழ்ப்பாணம் திரும்பியதும் "ஈழநாடு" பிரதிநிதியிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

### அடிப்படை உரிமைகள்

நான் 1956-ல் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்தபோதே அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைச் சாசனமொன்று சேர்க்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினேன். இதன் அவசியத்தை முதலிலேயே வலியுறுத்திய அரசியல் வாதிகளில் நாலும் ஒருவன் என்றே நம்புகிறேன்.

மொழி, மதம், சுதந்திரம் ஆகியவை சம்பந்தப்பட்டவரையில் உரிமைகளை மீறி நடப்பதனல் ஏற்படும் விளைவுகள்பற்றிப் பொதுமக்கள் அறிவதற்கு இந்தச் சாசனம் மிகவும் அவசியம். இதற்கு என்னுல் கூடுமானவரை சேவை செய்யும் நோக்குடன் அரசியலமைப்புச் சட்டத்தை திருத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றக் கமிட்டியுடன் சேர்ந்து வேலைசெய்ய விரும்புகிறேன்.

## யு. எஸ். நீர்மூழ்கி மூழ்கிவிட்டது

வாஷிங்டன், ஏப். 12

129 பேர்களுடன் அட்லாண்டிக்கடலில் மூழ்கிவிட்ட அமெரிக்க நீர்மூழ்கியைத் தேடும் முயற்சி நேற்றிரவு கைவிடப்பட்டது. அதன் கதி பற்றி இனி நம்பிக்கையில்லை என அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் காரணமாக உலகெங்குமுள்ள அமெரிக்கக் கடற்படை நிலையங்களில் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன. இந்திய டாக்டர் ராதாகிருஷ்ணன், அமெரிக்க ஜனுபதி கென்னடிக்கு இதுசம்பந்தமாக வருத்தம் தெரிவிக்கும் செய்[illegible] ஒன்றை அனுப்பியிருக்கிருர்.

நீர்மூழ்கி 8400 அடிக்குக் கீழே சென்று, நீரின் அமுக்கத்தில் வெடித்ததாகக் கருதப்படுகிறது.

## சிதம்பரவிநாயகர் தேர் திருவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

அத்தியடி சிதம்பர நடராச வீரகத்தி விநாயகர் கோவில் ரதோற்சவம் நாளை புதுவருட தினத்தன்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3 மணியளவில் இடம் பெறும்.

அன்று விசேஷ பூஜைகளும் மேளக்கச்சேரிகளும் நடைபெறும்.

## மழையால் சேதம்

யாழ்ப்பாணம், சனி

கடந்த இரு தினங்களாக யாழ்ப்பாணத்தில் பெரு மழை பெய்தது. யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் மழை பரவலாகப் பெய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இடி முழக்கத்துடன் கூடிய மழை சில இடங்களில் சேதத்தை உண்டாக்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## எடின்பரோ இசைவிழாவுக்கு எம். எஸ். சுப்புலக்ஷ்மி

புதுடில்லி, ஏப்ரல் 12

6 உயர்தர இந்தியக் கலைஞர்கள் எடின்பரோ சர்வதேச இசைவிழாவில் தங்கள் கச்சேரிகளை நிகழ்த்துவார்கள்.

கோகிலகான இசைவாணி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி, பரதநாட்டிய கலாவல்லி பி. பாலசரஸ்வதி, ஷனய்வாத்தியக்கலைஞர் பிஸ்மில்லாகான், சிதார் வாத்திய நிபுணர் ரவிசங்கர், சதுர் வாத்தியக் கலைஞர் அலிஅக்பர்கான் ஆகியோரே அவர்கள்.

அகில இந்திய வானெலி சங்கீத டைரக்டரும் மேனாட்டு தசங்கீத்திலும் நிபுணத்துவம் பெற்றவருமான நாராயணமேனன் வீணைக் கச்சேரி[illegible]வார்.

## ஜாகர்த்தாவில் சீனத் தலைவர்கள்

ஜாகர்த்தா, ஏப். 12

சீனக் குடியரசுத் தலைவர் திரு. லியூஷாசீயும், வெளிநாட்டு மந்திரி திரு. சென்யீயும் இன்று இந்தோனேஷியத் தலைநகர் ஜாகர்த்தா வந்து சேர்ந்தனர். ஜனதிபதி டாக்டர் சுகர்னே அவர்களை வரவேற்ருர். சீனத் தலைவர்களுடன் 50 அதிகாரிகளும் வந்திருக்கிருர்கள். 8 நாள் அவர்கள் இந்தோனேஷியாவில் தங்குவர்.

ரஷ்ய அமைப்பு விமானத்தில் வந்த அவர்களை 4 இந்தோனேஷிய ஜெட் "மிக்" விமானங்கள் பாதுகாப்பாக அழைத்து வந்தன.

## ஜெய்ஹிந்த்!

புதுடில்லி, ஏப்ரல் 12

நேற்று சீனவினல் விடுவிக்கப்பட்ட 144 இந்தியப் போர்க் கைதிகளில் பலர் களைப்புற்றிருந்ததாயும் "ஜெய்ஹிந்த்" "பாரதமாதாவுக்கு ஜே" என்ற கோஷங்களுடன் அவர்கள் இந்தியப் பிரதேசத்தில் நுழைந்ததாயும் நேரில் சம்பவத்தை கண்ணுற்றவர் ஒருவர் தெரிவித்தார். தாய்நாட்டின் தரையில் அவர்கள் விழுந்துவணங்கி முத்தமிட்டார்கள். பின் இந்திய மண்ணை எடுத்து நெற்றியில் திலகமிட்டுக் கொண்டார்கள். அதன் பின் 5 மைல் நடந்துவந்து கிபுடுவை அடைந்தார்கள். பல மாதங்களுக்குப் பின் சீனியும், பாலும் கலந்த தேநீரை அவர்கள் கண்டனர்.

## சட்டமேதை காலமானர்

சென்னை, ஏப்ரல் 12

64 வயதான முன்னுள் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ஏ. எஸ். பஞ்சாபகேதுஐயர், இன்று சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் காலமானர். சட்டமேதையும், பேரறிஞருமான திரு. ஐயர், 30-க்கு மேலான ஆங்கில நூல்களை இயற்றியிருக்கிருர்.

## 2500 ஆண்டுகளுக்கு முன்னல்...

தஞ்சாவூர், ஏப்ரல் 12

காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரியசுவாமிகள் இன்று தஞ்சாவூர் அரண்மனைக் கலைக்கூடத்தில் உண்மையின் உயர்வு பற்றி எடுத்துரைக்கையில், 2500 ஆண்டுகளுக்கு முன் ஞானிகள் மட்டுமின்றி சாதாரண மக்களும் உண்மையே பேசியதாகக குறிப்பிட்டார்.

## "முட்டுக்கட்டை தீர்க்க முயல்வேன்"

—யுதாண்ட்

நியுயோர்க், ஏப். 12

ஆயுத தணிக்கை முட்டுக்கட்டையைத் தீர்த்துவைப்பதில் என்னலான உதவிகளைச் செய்ய சித்தமாகவிருப்பதாக ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை நிருபர்களுக்கு யுதாண்ட் அளித்த போட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது: 'ஆயுதத்தணிக்கை சம்பந்தமாக பாப்பாண்டவர் விடுத்த வேண்டுகோளைப் போன்றே எனது கோரிக்கையும் ஒத்திருக்கிறது. ஆயுதத் தணிக்கை முட்டுக்கட்டையைத் தீர்த்து வைப்பதற்கு எல்லா முயற்சிகளையும் கையாள்வேன."

ஈழநாடு 14-4-63

ஞாயிறு பதிப்பு

அதிக பக்கங்களுடனும் விசேட கட்டுரை கதைகளுடனும்

புத்தாண்டு மலராக

வெளிவருகிறது.

## யாழ்ப்பாண மாநகரசபை கேள்விப் பத்திர அறிவித்தல்

11-ம் வட்டாரத்தில் உள்ள கலீபா அப்துல்ஹமீத் வீதிக்குச் சீமெந்து கொங்கிறீற் வடிகால் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் அரசாங்க அல்லது ஓரளவு அரசாங்க திணைக்களங்களில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து 1963-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 25-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப்பிணைப்பணமாக ரூபா ஐம்பதையும் (50/-) அத்துடன் திரும்பப் பெற முடியாத ரூபா ஐந்து (5/-) கேள்விப்பத்திரத்தின் பெறுமதியாகவும் செலுத்தி, 1963-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23-ம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை மாநகர மராமத்து இஞ்சினியரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விகள் முப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தெரியப்படும் கேள்விக்காரர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதும் கேள்விப் பிணைப்பணம் திரும்பத் தரப்படும்.

3. தேவைப்படும் இதர விபரங்களை, அலுவலக நேரத்தில் யாழ்ப்பாண மாநகர மராமத்து இஞ்சினியரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

டி. டி. ஜெயசிங்கா
ஆணையாளர்
யாழ்ப்பாணமாநகரசபை
மாநகரமண்டபம்,
10-4-1963. 897

## தெ. யா. ப. நோ. கூ. ச சமாசம், கிளிநொச்சி

களஞ்சியப் பொறுப்பாளர்

எமது பலைக்கிளை நுகர்ச்சிப்பொருள் கடைக்கு ஓர் பொறுப்பாளர் தேவைப்படுகிறது. இதற்கான விண்ணப்பங்கள் 20-4-63 வரை இலங்கையரிடமிருந்து எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பளம்: எல்லாம் உட்பட ரூபா 125-00 மட்டும்.

பிணை: ரொக்கம்ரூபா 1000/-. உறுதி அல்லது வீமாபிணை ரூபா 2500/-.

தகுதிகள்: வயது 25 முதல் 35 வரை. கனிஷ்டதராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். வியாபார அனுபவம் அவசியம்.

க. மயில்வாகனம்
காரியதரிசி
890

## வரி விளம்பரம்

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும்: தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநாதர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரிலிருந்து சிறிது தூரத்தில் தென்னை, பனை, மாமரங்களும், கிணறும் பாதையுமுள்ள பத்துப் பரப்பு காணி விற்பனைக்கு இருக்கிறது. இதை நாலாகப் பகிர்ந்து வாங்கலாம். ஒரு பரப்பின் விலை இரண்டாயிரம் ரூபா. இரண்டரைப் பரப்புக் காணியை வாங்கும் ஒருவர் அதன் முழுவிலையின் அரைவாசித் தொகையை முதலில் கொடுத்து மிகுதியை மாசம் நூறு ரூபா வீதம் கொடுக்கலாம். செல்லத்துரை, 271, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 857

## டாக்டர் கோபாலை குத்திய பியாரிலால் 3 வருட கடுங்காவல்

செங்கல்பட்டு, ஏப்ரல் 11

சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்துகொண்டிருந்த 'கொமெட்' விமானத்தில் இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனின் புதல்வரும், வெளிவிவகார இலாகா சரித்திரப்பகுதித் தலைவருமான டாக்டர் கோபாலை குத்திக்கடுங்காயம் விளைவித்த பியாரிலால் என்பவருக்கு செங்கல்பட்டு நீதிபதி 3வருடக்கடுங்காவல் தண்டனை விதித்தார். கொலைசெய்ய முயன்றதாக அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. பியாரிலால் இந்தோனேஷியாவிலுள்ள இந்தியத்தூதராலயத்தில் கடமையாற்றியவராகும்.

### வீடு வாடகைக்கு

கொக்குவில் காங்கேசன்துறை வீதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு அருகாமையிலிருக்கும் சம்பியன் ஒழுங்கையில் (பிரதான வீதியிலிருந்து 60 யாருக்குள்ளாக) நவீன மின்சார, தண்ணீர் வசதியுள்ள 'ராஜகம்'என்னும் வீடு வாடகைக்கு விடப்பட இருக்கிறது. தேவையானோர் நேரிற் சந்திக்கவும். 'கமல-வாசா', நந்தாவில், கொக்குவில். 898

### தேவை

பதவி-குமாஸ்தா, பிரசாரகர், பரிசோதகர். கல்வி-தமிழ் அல்லது சிங்கள எஸ்.எஸ்.ஸி. (ஆங்கிலத்துடன்). வயது-20—40. இரு பாலாரும். குமாஸ்தா: பிணைப்பணம் ரூ. 1500/- சம்பளம் 100-72-160 (படிகளுட்பட). முடிவுதிகதி 20-4-63. த பினன்ஸ் அனட் கறன்றி கொம்பனி லிமிடெட், மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 893

# 'நாட்டின் முன்னேற்றம் கருதி ஒன்றுசேர்ந்தோம்'

—என். எம். பெரேரா

# 'ஆட்சியை ஒப்படைத்தால் பிரச்னைகளை தீர்ப்போம்'

-- பிலிப் குணவர்த்தன

ருவான்வெல, வெள்ளி

"நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒருமுகப்பட்ட திட்டமொன்றை வரையும் முகமாகவே, இடதுசாரிக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரே மேடையில் வீற்றிருக்கின்றன. நாட்டின் முன்னேற்றத்துக்கான வழிவகைகளைக் கண்டுபிடிப்பதில் முனைவதே இடதுசாரி ஐக்கிய முன்னணியின் நோக்கமாகும்."

ருவான்வெலையில் நடைபெற்ற இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கூட்டமொன்றில் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

### முன்னேற்றம் தடைபட்டது

டாக்டர் என்.எம். பெரேரா தொடர்ந்து பேசியதாவது:-

"1956-ம் ஆண்டில் நாட்டில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டபோதிலும், காலம்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவினல் அந்த முன்னேற்றம் தடைப்பட்டது. காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்காவின் திட்டங்களுககு அவரது சில மந்திரிகள் குறுக்காகவிருந்தார்கள்.

### தியாகம் வேண்டும்

ஒரு நாடு முன்னேற்றமடையவேண்டுமென்று அந்த நாட்டை ஆட்சிபுரிபவர்கள் கருதினல், அவர்கள் கட்டாயம் தியாகம் செய்யவேண்டும். ஆனல், எண்ணெய்த் தகராறில் அமெரிக்காவிடம் சரணடைந்த தற்போதைய அரசாங்கத்திடமிருந்து இந்த நாடு எதையும் எதிர்பார்க்கமுடியாது."

### சோஷலிஸ்டு அறிமுகம்

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமன் பேசுகையில் பின்வருவாறு குறிப்பிட்டார்: "1953-ம் ஆண்டிலிருந்து, தொழிலாளர்கள், விவசாயிகள் நலனுக்காகப் பாடுபட்டவர்கள் இடதுசாரிக் கட்சியினர்தான். இந்த நாட்டில் சோஷலிஸத்தை அறிமுகப் படுத்தியவர்களும் இவர்கள் தான்."

### ஐந்து வருடத்தில் பிரச்னை தீர்ப்போம்

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப குணவர்த்தன பேசுகையில் தங்கள்வசம் ஆட்சியைக் கொடுத்தால், ஐந்து வருடத்துக்குள் நாட்டின் சகல பொருளாதார, சமூகப் பிரச்னைகளையும் தீர்த்துவிடமுடியும் என்று கூறினர்.

டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, திருமதி சோமா விக்கிரமநாயக்கா செனட்டர் ரெஜி பெரேரா ஆகியோரும் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர்.

## 'பணம் வீணாகிறது'

—ஆர். ஜி.

யக்கலை, வியாழன்

'அரசாங்க கார்ப்பரேஷன்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களை வீணாக செலவழிக்கையில், பொது வேலைகளுக்கு தம்மிடம் பணம் இல்லை என்று அரசாங்கம் கூறுவது புதுமையாக விருக்கிறது." என்று உறுவல கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கக கூட்டத்தில் தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி சேனநயக்கா பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அரசாங்க காப்பரேஷன்களுக்கு இந்த அரசாங்கம் வீணாகப் பணத்தைச் செலவழிக்கிறதென்றும், இந்த கார்ப்பரேஷன்களில் மந்திரிகளின் இனத்தவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் கூறினர்.

"இருபத்தைந்து அரசாங்க கார்ப்பரேஷன்களில், இரண்டு அல்லது மூன்று கார்ப்பரேஷன்கள் மட்டுமே லாபம் காட்டுகிறது. அமெரிக்க வெளிநாட்டு உதவி நிறுத்தப்பட்டதனல், அமெரிக்காவின் ஆறு கோடி ரூபாவை இலங்கை அரசாங்கம இழந்துள்ளது."

என்று திரு. ஆ. ஜி. கூறினர்.

## தமிழ்நாட்டு சபாநாயகர்

சென்னை, ஏப். 11

தமிழ்நாட்டு கீழ் சட்டசபை சபாநாயகர் திரு. செல்லபாண்டியன் இம்மாதக் கடைசியில் லண்டன சென்று அங்கு நடைபெறும் சட்டமன்றப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வார். பின் இத்தாலிக்குச் சென்று ஜூன் முதல் வாரத்தில் சென்னை திரும்புவார்.




குடும்பங்கள் கூடி மகிழும்போது...




குதூகலமும் திருப்தியும் நிலவுகிறது. அன்புக்கும் உறவுக்கும் பாத்திரமானவர்கள் மத்தியில் சீராட்டிப் பாராட்டி மகிழும் பண்பும் பரிமளிப்பும் பொங்கி வழிகிறது. இத்தகைய மனேகரமான வேளைகளில், உங்களைச் சுற்றி அமர்ந்திருக்கும் விருந்தினருக்கு மகிழ்வூட்டுவது வில்லியம்ஸ் பிஸ்கட்டுகளின் தனிச்சுவை. மதுரமான உருசியூட்டி முரமுரவென்று நாவிற் கரைந்து தித்திக்கும் புது வாசனைப் பொலிவுள்ள வகை வகையான பிஸ்கட்டுகள், இலங்கையின் தொழில் விருத்தித்துறையில் உங்களுக்குப் பெருமையும் நம்பிக்கையும் தரும் பிஸ்கட்டுகள் இவையே.

சிறந்ததையே பரிமாறுங்கள்...

வில்லியம்ஸ் பரிமாறுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஏகவிநியோகஸ்தர்கள்

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# "சீனு மீண்டும் தாக்கும்! எல்லைப்பகுதிக்கு இந்திய துருப்புக்கள் வந்தால்"

## வெளிநாட்டு நிருபருக்கு சீனப்பிரதமர் பேட்டி

கராச்சி, ஏப். 12

"கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் யுத்த நிறுத்தம் செய்த பிறகு, சீனு காலிசெய்த எல்லைப் பகுதிகளுக்கு இந்தியா தனது துருப்புக்களை அனுப்புமானல், இந்தியாவை மீண்டும் சீனு தாக்கும்" என்று பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அஸோஸியேடப் பத்திரிகை பிரதம நிருபர் திரு. சப்தர் அலி குரேஷிக்கு, சீனப் பிரதமர் அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சீன-இந்திய எல்லைத் தகராற்றில் இப்பொழுது நெருக்கடியில்லை. ஆனல் கடந்த நவம்பர் மாதத்தில் சீனு யுத்த நிறுத்தம் செய்த பிறகு சீனு காலி செய்த எல்லைப் பிரதேசங்களுக்கு இந்தியத் துருப்பினர் சென்ருல், இந்தியாவை எதிர்த்து சீனு போரிடும். கோஷ்டி சேராத இந்தியா இப்பொழுது கோஷ்டி சேர்ந்துவிட்டது.

ஜனதிபதி அயூப்கான் தலைமையிலுள்ள பாகிஸ்தான்; சீனுவுடனன தனது கொள்கை நேசமானது பகைமையற்றது என்பதைக் காட்டிவிட்டது.

### 'யூகோ. ஒரு சோஷலிஸ்டல்ல'

யூகோஸ்லேவியா ஒரு சோஷலிஸ்ட் நாடு அல்ல. கோஷ்டி சேராமை என்ற முத்திரைக்குப் பின்னல் இந்தியாவை அது ஆதரித்து, ஆசியாவில் ஊடுருவும் அமெரிக்க நோக்கத்துக்கு உதவுகிறது. சீனுவை எதிர்த்து இந்தியா ஆக்கிரமிப்பு, போர் ஆரம்பிக்கும் போது, இந்தியாவுக்கு ஒரு சோஷலிஸ்ட் நாடு பகிரங்கமாக உதவுவது நினைத்துப் பார்க்கமுடியாதது.

தனது மண்ணசை விஸ்தரிப்பு எண்ணத்தை திருப்திப்படுத்துவதற்காக அமெரிக்காவிடமிருந்து பொருளாதார, ராணுவ உதவிபெற, எல்லைத் தகராற்றை இந்தியா பிரமாதப்படுத்துகிறது."

### நீண்ட காலத்தின்பின் பேட்டி

சுமார் இரண்டு வருட காலங்களில் இப்பொழுதுதான் முதற் தடவையாக ஒரு வெளிநாட்டு நிருபருக்கு திரு. சூ-என்-லாய் பேட்டியளித்தார். இந்தப் பேட்டி, கடந்த மாதம் 31-ம் திகதி சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்றதாக அந்த நிருபர் தெரிவித்துள்ளார்.

——

# 'அணு ஆயுதபோரில் சீனர்கள் விருப்பம்'

## டெலிவிஷன் பேட்டியில் யு. எஸ். உதவிமந்திரி

வாஷிங்டன், ஏப். 12

'வலிமை மிக்க சீனு தென்கிழக்காசியாவில் பரவியதனைச் சரித்திரம் காட்டுகிறது அதனை அவர்கள் மீண்டும் செய்வார்கள். ஆனல் நேரடித் தாக்குதலின்றி கவிழ்ப்பு நடவடிக்கைகள் மூலமே அவர்கள் இவ்வாறு செய்ய விரும்புவார்கள் என்று தோன்றுகிறது' என்று யு. எஸ். உதவி மந்திரி ஹரிமன் என். பி. ஸி. டெலிவிஷன் பேட்டியில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

அணுஆயுதப் போரில் ஈடுபட குருஷ்சேவ் விரும்பவில்லை. ஆனல் ரஷ்யர்களைவிடச் சீனர்கள் அதிக கண்மூடித்தனம் கொண்டிருப்பதாகவும் அத்தகைய போரில் ஈடுபடத் தயாராக இருப்பதாகவும் சில ஆதாரங்கள் காட்டுகின்றன.

தொழில் அபிவிருத்தியடைந்த நாடுகள் அழியும் என்பதும் 10 கோடி அல்லது 20 கோடி மக்களை இழந்த போதிலும் சீனு தலைதூக்கிநிற்கும் என்பதும் அவர்களுடைய கருத்தாகும். சீனுவே சிறந்தோங்கும் என்று சீனர்கள் நம்பும்படி செய்யப்பட்டிருக்கிறர்கள்.

'கிரெம்லினைவிட கம்யூனிஸ்ட் சீன அபாயம் பெரியது. ரஷ்யர அபாயகரமற்றது என்பது அர்த்தமல்ல. ஏனெனில் ரஷ்யாவுக்கும் சீனுவுக்கும் இலட்சியம் ஒன்றே.

தென்கிழக்காசியாவில் புகுந்து அதனைச் சீனர்கள் கைப்பற்றுததுபற்றி ஆச்சரியப்படவில்லை' என்று கூறிய ஹரிமன் பகிரங்க யுத்தம் ஆரம்பிப்பதன் விளைவுகள்பற்றி அவர்கள் பயப்படுகிறர்கள் என்றும் சொன்னர்.

தாய்லாந்துடன் உடன்படிக்கைப் பொறுப்பு நமக்குள்ளது. அது சீனர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. படிப்படியாக மேற்கொள்ள சீனு உத்தேசித்திருக்கிறது.

——

# டாக்டர் ஸாகீர் ஹுசெயின்

## பம்பாய் திரும்பினுர்

பம்பாய், ஏப். 12

சூடான், எதியோப்பியா, ஐக்கிய அரபுக்குடியரசு ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து சுற்றுப்பிரயாணம் செய்த இந்திய உப ஜனதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசெயின் இன்று காலை பம்பாய் வந்து சேர்ந்தார். நேற்றிரவு கெய்ரோவிலிருந்து புறப்படுவதற்கு முன் ஐக்கிய அரபுக் குடியரசு பிரதமர் அலிசாப்ரியையும் உப ஜனதிபதியையும் அவர் சந்தித்துப்பேசினர்.

கெய்ரோவில் டெலிவிஷன் நிகழ்ச்சியொன்றில் பேட்டியளித்த ஸாகீர்ஹுசெயின் சீன-இந்திய தகராறு வெறும் எல்லைப் பிரச்னைமட்டும் கொண்டதல்ல வென்றும் ஆழமான உள்நோக்கம் வேறு சீனரிடம் இருக்கலாமென்றும் கூறினர்.

சீன-இந்திய தகராறின் உண்மை நிலையை ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாஸர் சரியான முறையில் உணர்ந்துள்ளாரென்றும் இந்தியாவுக்கு ஐக்கிய அரபுக் குடியரசு ஆதரவும் அனுதாபமும் காட்டிவருகிறதென்றும் டாக்டர் ஹுசெயின் கூறினர்.

——

# மதுவிலக்கு எதிர்ப்பு இயக்கம்

## ஈ. வே. ரா. தொடங்குவாராம்

திருச்சி, ஏப்ரல் 12

அவசரநிலைமை முடிவுற்றபின் மதுவிலக்கை எதிர்த்து பெரிய இயக்கமொன்றினைத் தாம் நடத்தவிருப்பதாக திராவிடக் கழகத் தலைவர் திரு. ஈ. வே. ராமசாமிநாயக்கர் ஒரு கிராமப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். இப்போது இயக்கத்தைத் தொடங்கினல் இதனல் ஏற்படக்கூடிய நிலைமையை சில எதிர்ப்பாளர் தமது சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும். ஆகையால்தான் அவசரகால நிலைமை முடியட்டும் என்றிருப்பதாகவும் அவர் சொன்னர்.

——

# இடைத் தேர்தல்

மாவிட்டபுரம், வெள்ளி

மயிலிட்டி கிராமச்சங்கத்தின் 8-ம்வட்டாரத்துக்கான இடைத் தேர்தலில் மூத்தார் கணபதிப்பிள்ளை, கதிரிப்பிள்ளை சுப்பிரமணியம், பூதப்பிள்ளை விசுவலிங்கம் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

# லாவோஸ் சர்வதேச கமிஷன் கூடவேண்டும்

## யுதாண்ட் கோரிக்கை

நியுயோர்க், ஏப். 12

லாவோஸ் நிலைமை சீர்பெறுவதற்கு லாவோஸுக்கான 14 தேசங்களைக் கொண்ட சர்வதேசக் கமிஷன் மீண்டும் விரைவில் கூட வேண்டுமென்று ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்தகால நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியான விளைவுதான் இன்று நடைபெறும் சம்பவங்கள் என்று யுதாண்ட் தெரிவித்தார்.

ஐ. நா. வில் அங்கத்துவமில்லாத இருநாடுகள் லாவோஸின் எல்லையிலிருப்பதும் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் சிக்கலாக இருக்கிறது என்றும் யுதாண்ட் கூறுகிருர்.

லாவோஸ் தலைநகர் வியன்டைனில் லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவன்னபூமாவை சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷன் தலைவர் அவதார்சிங் சந்தித்துப்பேசினர். தமதுசகாக்களான கனடா, போலந்துப் பிரதிநிதிகளுடன் இன்று மீண்டும் ஜார்ஸ்வெளிக்குச் செல்லவிருப்பதாக திரு. சிங் பின்னர் தெரிவித்தார்.

——

# செம்மறி ஆடு வளர்ப்புப் பண்ணை

சென்னை, ஏப்ரல் 12

சொபைக்கானலில் செம்மறி ஆடு வளர்ப்புப்பண்ணையொன்றை மத்திய அரசாங்கம் நிறுவவிருக்கிறது. இதற்கென 804 ஏக்கர் நிலத்தைத் தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்குக் கொடுத்துள்ளது.

# "பிரிவினை யோசனையை அமெரிக்கா கூறவில்லை"

## காஷ்மீர் பிரச்னைபற்றி புட்டோ

## "கௌரவமற்ற தீர்வையை பாக். ஏற்காது"

டாக்கா, ஏப். 12

காஷ்மீரைப் பிரிவினை செய்வதன்மூலம், அப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் யோசனை எதையும் அமெரிக்கா தெரிவிக்கவில்லை என்று தேசிய சட்டசபையில் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜுல்பிகர் அலிபுட்டோ கூறினர்.

### "யோசனை கூறவில்லை"

அமெரிக்க ஜனதிபதி கென்னடியின் கொள்கை திட்டமிடும் கமிட்டித் தலைவரான திரு. வால்டல் ராஸ்டாவ், கடந்தவாரம் இந்தியா-பாகிஸ்தான் கருத்துக்களை அறிய இங்கு வந்ததாகவும், காஷ்மீர் குறித்து நடைபெறும் இந்தியா-பாகிஸ்தான் பேச்சின் தன்மை குறித்து விவாதம் நடக்கவில்லையென்றும் காஷ்மீர் தகராற்றைத் தீர்ப்பதற்கு யோசனை எதையும் அவர் சமர்ப்பிக்கவில்லை என்றும் திரு. புட்டோ கூறினர்.

காஷ்மீர் பிரச்னை குறித்து இந்தியா-பாகிஸ்தானிடையே நான்கு தடவைகள் பேச்சு நடந்திருப்பதாகவும், அதன் விளைவு குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் காஷ்மீர் பிரிவினைக்கு நிர்ப்பந்தம் செய்யப்படுவதாக கவலை இருப்பதாகவும் எதிர்க்கட்சி அங்கத்தினர் மௌலவி பரீத் அகமட் கூறினர்.

### கல்கத்தா பேச்சு

திரு. புட்டோ மேலும் தெரிவித்ததாவது:-

'சம்பந்தப்படாத வேறு விஷயங்களை இந்தியா எழுப்பியதால் கல்கததா பேச்சில் காஷ்மீர் விஷயமாக முன்னேற்றம் ஏற்படவில்லை என்று கல்கத்தாவிலிருந்து திரும்பியதும் நிருபர்களிடம் நான் தெரிவித்தேன். இதனல் காஷ்மீர் விஷயமாக நாம் பரிசீலிக்கமுடியவில்லை. கல்கத்தாவுக்கு நான் புறப்படுவதற்கு முன்பிருந்த நிலையே நீடிக்கிறது.

காஷ்மீர் மக்களின் நியாயமான நலன்களைக் கவனித்துப் பாதுகாப்பளிக்காததும், கௌரவமான நியாயமான தீர்வு இல்லாததுமான எந்தத் தீர்ப்பையும் பாகிஸ்தான் அரசாங்கம் ஏற்காது.

# சிறந்த கலைஞர்களுக்கு விருதுகள்

## சென்னை கவர்னர் வழங்குவார்

சென்னை, ஏப்ரல் 12

சிறந்த கலைஞர்களுக்கான விருதுகளை இம்மாதம் 17-ம் திகதி சென்னை கவர்னர் திரு. மேதி வழங்கவிருக்கிருர். சென்னை ராஜ்ய சங்கீத நாடக சங்கம் சங்கீதம்; நாட்டியம், நாடகம், சினிமா ஆகிய துறைகளில் சிறந்த 23 கலைஞர்களைத் தெரிவுசெய்துள்ளது. கலைஞர்களுக்கான விருதுகள் வழங்கும் விழாவில் திரு. வழுவூர் ராமையாபிள்ளை பரதநாட்டிய பள்ளியின் 'கபிலை நாடகம்' என்ற தமிழ் நாட்டிய நாடகமும் நடைபெறும்.

விருதுபெறும் கலைஞர்கள் விவரம் வருமாறு:-

சங்கீதம்:- மதுரை திரு. மாரியப்ப சுவாமி (சாகித்திய கர்த்தா), கல்லிடைக்குறிச்சி திரு. ராமலிங்க பாகவதர் (வாய்ப்பாட்டு), தஞ்சாவூர் திரு. துரையப்ப பாகவதர் (கோட்டு வாத்தியம்). சங்கீத கலாநிதி மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர் (வயலின்), உமையாள்புரம் திரு. கோதண்ட ராமையர் (கடம், மிருதங்கம்), திருக்கடையூர் திரு. என். சின்னையா (தவில்), திரு. பி. வைத்திலிங்கம்பிள்ளை (கொன்னக்கோல்), திரு எம் பார் விஜயராகவாச்சாரியார் (ஹரிஜதா காலட்சேபம்).

நாட்டியம் - நாட்டிய கலா கேசரி வி. பி. ராமையா (பரத நாட்டியம், நட்டுவனர்).

நாடகம்:- (அமெச்சூர்) எஸ் ஜே. ஆச்சாரியா என்ற ஜகந்நாதாச்சாரி (நடிகர்).

நாடகம்:- எம். ஆர். ராதா (நடிகர்), எம். என். ராஜம் (நடிகை), ஆர். வெங்கடாசலம் (ரா. வே.), (நாடகாசிரியா) தேவி நாடக சபை கே. என். ரத்தினம், (தயாரிப்பாளர்) புளியபட்டி கே. சுப்பையா ரெட்டியார் (தயாரிப்பாளர்—கூடுதல் விருது).

சினிமா:- கே. சாரங்கபாணி (நடிகர்), சிவாஜி கணேசன் (நடிகர், தயாரிப்பாளர் என்ற கோதாவில் விசேஷ விருது), என்.எஸ்.கே. மதுரம் (நடிகை), எஸ். டி. எஸ். யோகி (வசன கர்த்தா), ஏ வி. மெய்யப்ப செட்டியார் (தயாரிப்பாளர்), ஒ. வி. ராவ், (டைரக்டர்), ஜிதன்பானர்ஜி (காமிராமேன்), வி. எஸ். ராகவன் (சவுண்ட் என்ஜினீயர்).

——

# "சீனர்களை நம்பமுடியாது" — மொரார்ஜி

வாரணுசி, ஏப்ரல் 12

வாரணுசியில் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டமொன்றில் திரு. மொரார்ஜிதேசாய் பேசுகையில் சீனர்களை எப்படி நம்ப முடியாதோ அதே மாதிரி கம்யூனிஸ்டுகளையும் நம்ப முடியாது என்று கூறினர். எந்த நிமிஷத்திலும் அவர்கள் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொண்டுவிடுவார்கள் என்றும் அவர் எச்சரித்தார்.

——

# ரூ. $8\frac{1}{2}$ கோடி முதலீடு

பான், ஏப். 10

1962-ம் ஆண்டுடன் முடிவடைந்த 10 வருட காலத்தில் மேற்கு ஜெர்மனி இந்தியாவில் எட்டரைகோடி ரூபாய்களும் அதிகமாக முதலீடு செய்துள்ளதாக மேற்கு ஜெர்மனியின் பொருளாதார விவகார இலாகா அறிக்கையிலிருந்து தெரிய வந்துள்ளது. பாகிஸ்தானில் இதே காலத்தில் சுமார் 1 கோடியே 37 லட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டது

——

# "நாகர்கள் சுட்டு கொல்லப்பட்டனர்" —நேரு

புதுடில்லி, ஏப். 11

அஸ்ஸாமில் பகை நாகர்கள், பிரயாணிகள் ரயிலுக்கு வெடி வைத்தது பற்றி திரு. நேரு லோகசபையில் பிரஸ்தாபித்தார். 250 நாகர்கள் இரவு 10 மணிக்கு துப்பாக்கிப்பிரயோகம் செய்ததுடன், 150 அடி நீளமான ரயில்பாதையை வெட்டி வைத்துத் தகர்த்திருந்தனரென்றும், ரயிலில் சென்ற பாதுகாப்பு வீரர்கள் 150 முறை சுட்டதன் காரணமாக பல நாகர்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் போயினர் என்றும் அவர் அறிவித்தார்.

### அறிவித்தல்

நாளை ஞாயிற்றுக்கிழமை (14-4-63) இந்து-சிங்கள புதுவருட விடுமுறையாதலால் திங்கட்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவர மாட்டாது.

### மணி வாக்கு

நாம்தான் செய்கிறோமென்ற எண்ணத்தை விட்டு, நம்முன் இருக்கும் இறைவனே செய்கிறானென்ற மனப்பான்மை கொண்டால் 'நான்' என்ற அகங்காரம் ஒழியவும் இறைவனுடன் இரண்டறக் கலக்கவும் வழி பிறக்கும்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

EELANADU: National Tami Daily Post Box 49, 'affna Te·egrams EELA NADU Jatfna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 31 உ (13-4-63)

## புதிய அரபுக் குடியரசு

எகிப்து, ஸிரியா, ஈராக் இம்மூன்று நாடுகளையும் கொண்டு ஒரு புதிய அரபுக் குடியரசு, சமஷ்டி முறையிலே அமைக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுகளுக்கு முன்பாக எகிப்தும், ஸிரியாவும் மட்டும் இணையச் சம்மதித்துப் பின்னர் பிரிய நேரிட்டது. சமீபத்தில் ஸிரியாவிலும், ஈராக்கிலும் இராணுவப்புரட்சி ஏற்பட்டபின், இம்மூன்று நாடுகளும் இணைய முற்பட்டுள்ளன. புதிய குடியரசு முந்தியதைவிட அதிக பலமும் விஸ்தீரணமும் வாய்ந்ததாக இருக்கும்.

புதிய அரபுக்குடியரசு ஸ்திரமாக இருக்குமா? மேலும் அரபு நாடுகள் இதில் சேருமா? என்பன முக்கிய கேள்விகள். இதற்கு நடுநாயகமாக இருப்பவர் எகிப்திய நஸார்தான். கெய்ரோவே இதற்குத் தலைநகராக இருக்கும். பழைய குடியரசு சிதைந்ததற்கான காரணங்களை நஸார் நன்கறிவார். பழைய அனுபவம் காரணமாக அதே தவறுகள் மீண்டும் ஏற்படாமல் அவரும், அவரது இரு புதிய சகாக்களும் எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டி இருக்கும்.

விடுதலையான மற்ற அரபு நாடுகளாகிய அல்ஜீரியாவையும் ஏமனையும் இப்புதிய குடியரசில் இணைக்க இம்மூன்று நாட்டு அமைச்சர்களும் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். பிரிந்து வாழ்வதைவிட, சேர்ந்து பரஸ்பர உதவியுடன்; ஒத்துழைப்புடன் வாழ்வதில் தங்களுக்கு அதிக நன்மையுண்டென்பதைப் பல அரபுநாட்டு மக்களும் அதிகமாக உணர்ந்தாலே புதிய அராபியக் குடியரசு மேலும் பலப்படக்கூடும். அரபுநாடுகள் இஸ்ரேல் தேசத்தைத் தங்கள் பொதுவான விரோதியாகக் கருதுகின்றன. தங்களிடையே புதிய ஒற்றுமை ஏற்பட்டாலே, இஸ்ரேலை அடக்க முடியுமென்று அவர்கள் நம்புவது இயற்கை.

மேலும் ஈராக் உள்ளிட்டு பல அரபுநாடுகளில் பெட்ரோல் அதிகமாகக் கிடைக்கிறது. பெட்ரோல் கிணறுகள் ஒப்பந்தங்களின்படி, பிரிட்டன், அமெரிக்கா இவற்றின் நிர்வாகத்திலுள்ளன. சூயஸ் கால்வாயைதேசஉடைமையாக்கியதுபோல், இந்த எண்ணெய்க் கிணறுகளையும் செய்வதாயின், அரபு நாடுகளின் பொருளாதார சுபிட்சம் வளருமென்று அவர்கள் கருதக் காரணமுண்டு. தனித்தனியே பிரிந்து இருப்பதைவிட, ஒரு பலத்த சமஷ்டிக் குடியரசில் சேர்ந்தால் இந்த ஏற்பாட்டை வெற்றிகரமாகச் செய்ய முடியுமென்றும் அதனுல் அரபு மக்கள் அதிக சுபிட்சமாக வாழலாமென்றும் தங்கள் பாதுகாப்புக்கும் இது உகந்ததென்றும் அவர்கள் நம்பி, புதிய சமஷ்டியில் சேர முன்வரக் கூடும்.

புதிய அராபியக் குடியரசுக்குத் தாங்கள் எதிர்ப்பில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. புதிய குடியரசை அமெரிக்கா மட்டுமன்றி பிரிட்டன் முதலிய நாடுகளும் அங்கீகரித்து, அத்துடன் நல்லுறவை நீடித்துக் கொள்ளவே விரும்பும். இஸ்ரேல் பிரச்னையை யுத்தமூலமன்றி, சமாதானப் பேச்சுகள் மூலம் தீர்த்துக் கொள்வதில்தான், புதிய அரபுக் குடியரசின் வெற்றியுமடங்கும். புதிதாக விடுதலையடைந்த அரபுநாடுகள், யுத்த முயற்சியில் ஈடுபடுவதைவிட்டு, சமாதான சுபிட்சத்தில் தங்கள் பூரண கவனத்தையும் திருப்ப முடிந்தால், புதிய அரபுக்குடியரசு, அரபுமக்களுக்கு புதிய வாழ்வும் நம்பிக்கையும் அளிக்க முடியும்.

# மொழிஉரிமை எந்தரீதியில் இருக்கவேண்டும்?

## தமிழர்களுள் அடிப்படை உடன்பாடு அவசியம்

—எஸ். சிவசுப்பிரமணியம்—

**தமிழர்கள் தமது கோரிக்கைகள் சம்பந்தமாக தமக்குள்ளேயே ஒரு உடன் பாட்டுக்கு வருவது நல்லதென்றும், இவ்வித உடன் பாட்டுக்கு வருவதற்கு தமக்கிடையே இருக்கும் கருத்து வேறுபாடுகளை நீக்கி வட்டமேசை மகாநாடு ஒன்று கூடுவது வரவேற்கத்தக்கதாக இருக்குமென்றும் கட்டுரை தெரிவிக்கிறது.**

தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கான அரசியல் ரீதியான நடவடிக்கைகள் பற்றித் தங்கள் பத்திரிகையில் வெளிவந்த ஆசிரியத் தலையங்ககங்ள் ராஜதந்திரமுடையதாகவும் தமிழருக்கு வழிகாட்டியாகவும் அமைந்துள்ளன.

### தமிழர்களுள் வட்ட மேசை மகாநாடு

மற்றச் சமூகங்களுடன் கூடி வட்டமேசை மகாநாடு நடத்துவது சந்தேகமின்றி வரவேற்கத்தக்கதே. தமிழர்கள் தமக்குள்ளேயே வட்டமேசை மகாநாடுகளை நடத்துவது சாத்தியப்படுமானுல் அவ்வித வட்டமேசை மகாநாடுகளைக் கூட்டுவது பெரிதும் விரும்பத்தக்கதாகவிருக்கும். தமிழ் மக்களிடையேயுள்ள பல்வேறு கட்சிகள், பகுதிகள், வேறுபட்ட நோக்கங்களையுடையவர்கள், கட்சிசார்பற்றவர்கள் ஆகியோர் எல்லோரும் ஒன்று கூடி எம்மிடையே நிலவியுள்ள பொதுப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வது தமிழர்களுக்கு மிக்க நன்மையைத் தருவதாகவிருக்கும்

இதேநேரத்தில் தமிழர்களின் உரிமைகளைப் பெற வட்டமேசை மகாநாடுகள் நடத்துவதில் மட்டுமே நாம் தங்கி நின்றுவிடக்கூடாது. தமிழர் தமதுகோரிக்கைகளைப் பெற ஒரு வழியை அல்லது ஒருகட்சியை அல்லது ஒரு தலைவரை மட்டுமே தங்கி நின்றுகொண்டிருக்கக்கூடாது. சத்தியாக்கிரகமும் நேரடி நடவடிக்கையும் சாத்தியப்படாது என விட்டுவிட வேண்டியதல்ல. இவை ஒத்திப் போடப்படலாம்.

இப்பொழுது அத்தியாவசியமாகத் தேவைப்படுவன பின்வருமாறு:-

1. மொழியுரிமை எந்தரீதியில் இருக்க வேண்டுமென தமிழர்களிடையே ஒரு அடிப்படை உடன்பாடு இருக்க வேண்டும். தமிழும் ஆங்கிலமும் துணை மொழிகளாகவோ அரசகரும கூட்டுமொழிகளாகவோ சிங்களத்துடன் இருக்கவேண்டும் என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2. தமிழ் சமூகத்தைச் சேராத மற்றச் சமூகத்தினருடன் தொடர்பு கொண்டு தமிழ் மக்களின் நீதியும் நியாயமும் நிறைந்த கோரிக்கைகளை அவர்களுக்குத் தெளிவுபடுத்தி அறியவைக்கவேண்டும்.

3. தமிழர்களின் கோரிக்கைகளுக்கு சர்வதேச ஸ்தாபனங்களின் ஆதரவு தேடுதல் வேண்டும்.

4. அரசியல் சட்டங்களில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிசெய்ய வேண்டும்.

5. தமிழர்களின் உரிமைகள் விஷயத்தில் இடைக்கால உடன்பாடுகளுக்கு வருவதற்கு உடன்படுதல் நல்லதாக இருக்கும். கருதினுல் நியூமான், மகாத்மா காந்தி ஆகியோர் கைக்கொண்ட வழிமுறைகளைப் பின்பற்றுதல் நல்ல துணையாக அமையும்.

6. கலாச்சார, பொருளாதார, விவசாய, சமயத்துறைகளில் (எந்தச்சமயமாக இருந்தாலும்) முன்னேற்றமடைய உழைக்கவேண்டும்.

இந்தவிதநோக்கங்கள் கட்சி, தனிப்பட்டவேறு பாடுகளின்றி தமிழர்கள் ஒற்றுமைப்பட உடன்பட்டால் நல்ல பலனைத் தரும். கட்சி, தனிப்பட்ட கொள்கைகள் இவற்றுடன் ஒற்றுமை மிக்க அவசியம். தமிழர்களுள் ஒற்றுமையை வளர்கக கட்சிகளும் பல வகுப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

### செயலற்று இருக்கக் கூடாது

வட்டமேசை மகாநாடு நடத்துவது சாத்தியப் படாது போனுல் தமிழர்கள் நம்பிக்கையிழந்து செயலற்று இருந்து விடக்கூடாது. தமிழர் தமது உரிமைகளைப் பெறுவதற்கு எந்தப பகுதியினரும் பிரதமருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் எம். பி. க்களுக்கும் அரசியல் இயக்கங்களுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக்கும், நிலையங்களுக்கும் கோரிக்கைகளைத் தெரிவிக்கலாம். செயல் படுத்துவதற்கு திட்டமில்லையெனக்கூறுவது புத்திசாலித் தனமானதல்ல. தேசாபிமானமற்றது இது. இந்த இக்கட்டான நிலையில் ஆத்திரப்படாது தனித்தும் பிறரோடு கூடியும் தமிழினத்துக்கு செய்ய வேண்டிய சேவை செய்து கொண்டிருப்பது ஒவ்வொரு தமிழரின் கடமையுமாகும்.

இறைவனில் நம்பிக்கை வைத்திருக்கும் தமிழர்கள் போன்ற மக்கள் இறைவன் மீது நம்பிக்கை வைத்துக் கொண்டு தமது கடமையில் ஈடுபடலாம்.

பாரம்பரிய பெருமைவாய்ந்த கலாச்சாரத்தையும் நாகரீகத்தையும் உடையவர்கள் தமிழர்கள்.

வேதாந்தாம், துணிவு, நன்மையாகிய நல்ல அம்சங்களெல்லாம் அமைந்த சமயத்தையுடைய நாம் இவற்றைப் பேணி நமது கோரிக்கைகளைப் பெற முயற்சி செய்யவேண்டும்.

நம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நாம் திருவள்ளுவரின் திருக்குறளைத் துணை கொள்ளவேண்டும்.

எதிர் வரும் புதுவருடம் சகல மக்களிடையேயும் மகிழ்ச்சியையும் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் வளர்க்க உதவி புரிவதாக இருக்கட்டும்.

---

## இளைஞர்களுக்கு உளக்கோளாறு

### ஆசிரியர் கருத்து

உடுப்பிட்டி, வெள்ளி

குடும்பவாழ்வின் ஒருமைப்பாட்டுக்கான பண்பு பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இல்லாதபடியால் தான் இளைஞர்களிடையே உளக்கோளாறுகள் அதிகரித்து வருகின்றன. என்று உரும்பராய் இந்துக் கல்லூரி அரசியல் சரித்திர மாணவர் மன்றத்தில் பேசுகையில் வடபிரதேச உடல் நலக் கல்வியாளர் திரு. சி. பொன்னம்பலம் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

அமெரிக்கப் பாடசாலைகளில் படங்கள், உபகரணங்கள் ஆதியன அதிகம் பயன்படுவதுடன் மாணவர் சுதந்திரமாகப் பேசுவதற்கும், பாடங்களைக் கலந்துரையாடிப் படிப்பதற்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. மாணவ மாணவிகளிடையே அச்சம், வெட்கம் கிடையாது. மாணவ மாணவிகள் ஒற்றுமையாகவே வாழ்வார்கள்.

நீக்ரோவை விட மற்றைய கறுப்பு நிறத்தவர்களுக்கு அமெரிக்கர் சமுதாயத்துறையில் சமத்துவம் அளிக்கின்றனர். நீக்ரோவருக்கும் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், சட்டக்கல்லூரிகள் ஆகிய கல்வி ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. கே. சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார். செல்வன் க. பாலசுப்பிரமணியம் நன்றியுரை நிகழ்த்தினர்.

---

## பாடசாலைகள் அதிகரிப்பு

கொழும்பு, வெள்ளி

ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலைகளை 1957-ம் வருடம் முதல் கல்விப்பகுதி ஆரம்பித்துள்ளது. நாட்டின் பல பாகங்களிலும் பாடசாலைக்குப் போகும் வயதுடைய பிள்ளைகளின் தொகை அதிகரித்தபடியால் இப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலைகளை ஆரம்பித்ததன்மூலம் ஒரு லட்சத்து ஐம்பதினயிரத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்விவசதி பெற்றுள்ளார்கள்.

## ஐயாறன் எழுதுவது

நாளை ஞாயிற்றுக்கிழமை புதுவருஷம் பிறக்கின்றது. அன்பர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த புதுவருஷ வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

புதுவருடம் வரும் பின்னே பஞ்சாங்கம் வரும் முன்னே. யாழ்ப்பாணத்திலிருந்து வாக்கியம், திருக்கணிதம் எனும் இருபஞ்சாங்கங்களும் பல வருடங்களாகத் தொடர்ந்து புகழுடன் வெளியாகி வருகின்றன. வாக்கிய பஞ்சாங்கம் சிலவாரங்களுக்குமுன் கிடைத்தது. எதிர்பாராத சில தடைகள் ஏற்பட்டும், திருக்கணித பஞ்சாங்கமும் வெளியாகிவிட்டது

பஞ்சாங்கம் கணித்து வெளியிடுவது ஓர் அருங்கலை. எவ்வளவோ சோதனைகள் ஏற்பட்டும், இங்கிருந்து இரு பஞ்சாங்கங்களும் வழமைபோல் வெளியாகி வருவதைப்பற்றி யாழ்ப்பாணம் பெருமைகொள்ளலாம். இப்பஞ்சாங்கங்களுக்கு இலங்கையில் மட்டுமன்றி தமிழ்நாட்டிலும் மலாயா முதலிய இடங்களிலும் நல்ல மதிப்பும் கிராக்கியுமுண்டு.

புதுவருட தினத்தன்று புதுப் பஞ்சாங்கம் வாங்கி, புதுவருட பலன்களைப் படிப்பது ஒரு பழைய சம்பிரதாயம். ஒவ்வொரு தமிழர் வீட்டிலும், அவர்கள் எம்மதத்தைச் சேர்ந்தவராயிருப்பினும், புதுப்பஞ்சாங்கம் வாங்கி வைத்து நல்ல நேரம் பார்த்து எக்காரியத்தையும் தொடங்குவதைப் பார்க்கின்ரேம். இதைச் சிலர் மூடநம்பிக்கை என்று கருதலாம். ஆனுலும் பொதுமக்கள் இங்கு பஞ்சாங்கத்தை, வழிகாட்டும் உற்ற நண்பனுகவே வீட்டில் வைத்து மதித்து வருகிருர்கள்.

* * *

புதுவருட பலன் எப்படி என்று ஒரு சோதிட அன்பரைக் கேட்டேன். பல கஷ்டங்கள் ஏற்படலாமென்ருர். இந்தியா-சீன யுத்தம் மூளலாமாம். இலங்கையிலும் அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடுமென்றும் சொன்ஞர்.

எல்லாம் எப்பொழுதோ முடிந்தகாரியம். நடப்பது நடந்தே தீரும். எதுவரினும் வரட்டும். எல்லாம் நன்மைக்கே என்று இறைவனையே நம்பி வாழ்பவருக்குக் கவலையில்லை, பயமில்லை.

"ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா சர்வ பாபேப்பியோ மோக்ஷயிஷ்யாமி மாசுச" என்று உறுதிகூறுகிருர் பகவான் பகவத்கீதையிலே.

'அதாவது எல்லாப்பொறுப்புகளையும் என்மீது போட்டுவிட்டு, என்னையே சரண் புகுவாய். உன் பாபங்களையெல்லாம் தீர்த்து நான் விடுதலை அளிக்கின்றேன், வருந்தாதே' என்கின்ருர்.

கடவுளை நம்புவதற்கும் கடவுளையே நம்புவதற்கும் அதிக வேற்றுமையுண்டு. கடவுளையே நம்பி வாழவேண்டுமாம்! அப்பேர்ப்பட்டவருக்கு என்ன கஷ்டம் வரினும் சரி அவற்றை எல்லாம் தீர்த்து விடுதலை அளிப்பாராம இறைவன். ஆனுல் கடவுளையே நம்பி வாழ்வது சுலபமா?

* * *

திருமலைக் கோவிலுக்குப் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்வது எப்படி என்பது பற்றி ஒரு பிரச்னை இருப்பதாகத் தெரிகிறது. இவ்விஷயத்தில் இறைவன் தீர்ப்புக்கே விட்டுவிடலாம். அதாவது தகுதியானவர்களின் பெயர்களை எல்லாம், சீட்டுகளில் எழுதி ஒரு குடத்துக்குள் போட்டு, சிறு குழந்தையைக்கொண்டு, அவற்றிலிருந்து சீட்டுகளை இழுக்கலாம். அப்படி வந்த பெயர்களைக்கொண்டு நிர்வாக சபையை அமைத்தால், தோ

(5-ம் பக்கம் பார்க்க)

# மாநகரசபையில் ஊழலை ஒழிக்க வழியுண்டு

## மாஜிமேயர் டாக்டர் தர்மலிங்கம் கூறுகிறார்

### ஸ்தலஸ்தாபனசபைமீது மீண்டும் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், சனி

"உள்ளூராட்சி அதிகார சபை உள்ளூராட்சி மன்றங்கள் நன்மைபெறக்கூடிய வகையில் பொது நோக்குடன் சேவைசெய்ய வேண்டுமேயல்லாது தனிப்பட்டவர்களுடைய செல்வாக்குக்காகச் சேவைசெய்யக்கூடாது. இந்நிலைமையில் திருப்தி ஏற்படாதவரையில் உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் நிர்வாகச் சீர்கேடுகளும், ஊழல்களும் ஒருபோதும் குறையமாட்டாது. எனது காலத்தில் உள்ளூராட்சி அதிகாரசபை தனது கடமையை நேர்மையாகச் செய்யவில்லை என்பது என்னுடைய எண்ணமாகும்" என்று யாழ்ப்பாணம் மாஜி மேயர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநகரசபையின் விசேஷ கூட்டத்தில் புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. பி. எம். ஜோனைப் பாராட்டிப் பேசும் போதுகூறினர். ஸ்தலஸ்தாபன அமைச்சு சமீபத்தில் விடுத்த அறிக்கைக்குப் பதிலளிக்குமுகமாக தனது பேச்சை டாக்டர் தர்மலிங்கம் நிகழ்த்தினர்.

முதலில் தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் பேசிய டாக்டர் தர்மலிங்கம் மேலும் குறிப்பிட்டதாவது:-

"நேர்மையாகச் சேவை செய்யவில்லை என்ற எண்ணத்தையும் பல உள்ளூராட்சி மன்றங்களின் மனக்கசப்பையும் பெறுமாயின் உள்ளூராட்சி அதிகாரசபை இருப்பதில் எவ்வித பயனும் ஏற்படாததுடன், உள்ளூராட்சிச் சபைகள் நிறுவப்பட்டதின் நோக்கமும் சிதைக்கப்பட்டதாகக் கருதவேண்டிவரும்.

தண்ணீர் விநியோகத் திட்டத்தை நகரப்படத்தில் ஒப்பிட்டுப் பார்த்தபோது 22 இலட்சம் ரூபாய் செலவிட்டு அரை இலட்சம் ரூபாய் வட்டி கூட எடுக்கமுடியாத அரசியல் தண்ணீர் விநியோக முறையாக தண்ணீர்த்திட்டம் அமைந்து இருக்கிறதேயன்றி, பொதுமக்களுடைய தேவைகளுக்கு ஏற்பத் தண்ணீர் கொடுக்கும்முறையாக இல்லை.

#### மாநகரசபையும் மேயர் பதவியும்

மாநகரசபைகு முதல்வராகத் தெரிவுசெய்யப்படும் முதல்வர்கள் எல்லோரும் எப்பொழுதும் மாநகரசபை வேலைகளைப் பூரணமாக அறிந்துகொண்டோ, அவர்கள் தங்கள் முதல்வர் பதவிக்காலம் எவ்வளவு காலத்துக்கு என்று தெரிந்து கொண்டோ பதவிக்கு வருபவர்கள் அல்ல. இந்த நிலையில் எல்லா முதல்வர்களும் தங்களுக்குரிய கடமைகளை அரிவரியில் இருந்தே ஆரம்பிக்க வேண்டியிருப்பதினால் அவர்கள் பொதுமக்களுக்கு நினைத்தபடி திட்டமிட்டுச் சேவைசெய்யப் போதிய சந்தர்ப்பம் கிட்டாது போகிறது. இதே நிலவரம் எனக்கும் ஏற்பட்டது.

மாநகரசபை முதல்வருக்கு ஒரு சிறு தனிக் கந்தோரும், அவருக்கு நம்பிக்கையான ஒரு விகிதரும் நிரந்தரமாக இருந்து மாநகரசபை முதல்வரினால் இடப்படும் கட்டளைகளை உத்தியோகத்தர்கள் என்ற முறையில் எவ்வளவுதூரம் செய்கிறார்கள் என்பதை அவ் உத்தியோகத்தர் கவனித்து முதல்வரின் கவனத்துக்குக் கொண்டுவரக்கூடிய வகையில் மாநகரசபையின் நிர்வாகப் பகுதி திருத்திஅமைக்கப்பட வேண்டும்.

#### மேயர் சொல்லும் வேலைசெய்வர்

எல்லா மாநகரசபைகளிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் நிரந்தரமாகச் செய்ய வேண்டிய சில சேவைகள் கடமைகள் இருக்கின்றன. ஆனால், எங்கள் மாநகரசபையில் கடமைபுரியும் ஊழியர்களுக்கோ ஏதோ காரணத்தினால் நிரந்தரமான கடமைகள் எதுவும் இல்லாமல் சேவை செய்கிறார்கள். இதனால் அவர்களுடைய வேலைகளைச் சரியாகக் கண்காணிக்க முடியாத நிலை மேலதிகாரியாக இருப்பவருக்கு ஏற்படுகிறது. இந்த ஊழியர்கள் எல்லோரும் மேயர் சொல்லும் வேலைசெய்யும் கொள்கையுடைய ஊழியர்களாகப் பழக்கப்பட்டுள்ளதினால் முதல்வராக இருப்பவரே எல்லா வேலைகளையும் சொல்லிச் செய்விக்க வேண்டியிருக்கிறது. இவ்விதம் எல்லா வேலைகளையும் திருப்திகரமான முறையில் முதல்வர் ஊழியர்களுக்குச் சொல்லிச் செய்விக்கமுடியாது. ஊழியர்கள் தாங்களாக உணர்ந்து சேவைசெய்வதினால்தான் பொதுமக்கள் அதிகமான நன்மையைப்பெற முடியும். இந்தஎண்ணத்தைச் செயலில் கொண்டு வரவேண்டியது ஆணையாளருடையவும், முதல்வருடையவும் கடமையாகும்.

மாநகரசபை முதல்வராக இருப்பவர்கள் எவரானலும் உண்மை, நேர்மை, கண்ணியம், கடமையுணர்ச்சி முதலான அருங்குணங்களுடன் தனது கடமைகளைச் செய்தால் எந்தக் கருமங்களிலும் முகமன்-பாரபட்சம்காட்டாமல் நடந்தால் அவர்களின்கீழ் கடமையாற்றும் ஊழியர்களும் தலைவரின் அருங்குணங்களுக்கு அமைவாகவே நடப்பார்கள் என்பது நான் அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

#### ஊழலை ஒழிக்க வழி

மாநகரசபையில் வந்து குவியும் கட்டிட விண்ணப்பங்களும், மின்சார விநியோகப் பத்திரங்களும் அவை கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படுமானல் நகரசபையில் நிலவி வரும் ஊழலை அறவே ஒழிக்க முடியும் என்பது என்னுடைய நம்பிக்கை.

மாநகரசபையில் உள்ள ஒவ்வொரு இலாகாத் தலைவர்களும் தங்கள் தங்கள் பகுதியில் செய்யப்பட்ட, செய்த, செய்கின்ற வேலைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் நன்றாக அறிந்துகொண்டு கடமைபுரிய வேண்டும்.

முதல்வர் ஒரு வேலையைச் செய்யும்பொழுது எதிர்க்கட்சி என்று இருப்பவர்கள் பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்த முயலவேண்டுமேயன்றி, முதல்வரின் கொள்கைகளையும், திட்டங்களையும் முற்றாக முறியடித்து அழிக்க முயலக்கூடாது. இந்தப் பரந்த எண்ணம் இச்சபையில் சிறிதும் இல்லை என்பதை மிக வருத்தத்துடன் கூறுகிறேன்.

மாநகரசபையில்கட்சி இருப்பது சரியல்ல என்று சிலர் கூறுகிறார்கள். கட்சிக்கு கொள்கைகள் இல்லாமல் இல்லை. என்ன வேலைகளை என்ன வகையில்திட்டமிட்டுச் செய்யவேண்டும் என்ற திட்டங்கள் இல்லாமல்கட்சி இயங்கவில்லை.



### நுவரேலியாவில் பிரதமர்

நுவரேலியா, வெள்ளி

பிரதமர் திருமதி சிறிமாபண்டாரநாயக்கா ஓய்வுபெறுவதற்காக நேற்று நுவரேலியாவுக்குச் சென்றுள்ளார்.

கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவும் தற்பொழுது இங்கு ஓய்வுபெறுவதற்காக வந்துள்ளார்.

### கருணாரத்ன விவகாரம் மந்திரிகள் ஆராய்ந்தனர்

கொழும்பு, வியாழன்

நிதியமைச்சரின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. அசோகா கருணாரத்னவை, பதவியிலிருந்து வேலை நீக்கம் செய்வது சம்பந்தமாக நேற்று மந்திரிகள் ஆராய்ந்தனர்.

திரு. அசோகா கருணாரத்ன, பொது மேடைகளில், அரசாங்க கொள்கைகளை கண்டனம் செய்தது சம்பந்தமாக அவரை பதவியிலிருந்து நீக்குவதா இல்லையா என்பது குறித்து நேற்று மந்திரிகள் ஆராய்ந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ரம்புக்கன என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் திரு. அசோகா கருணாரத்ன பேசுகையில் பின்வருமாறு கூறினர். 'தற்போதைய அரசாங்கம் சில குடும்பங்களையும் சில மந்திரிகளையும் அணைத்துக்கொண்டு இருக்கிறது. பார்லிமெண்டில், மற்றவர்களைப்போல் கையை உயர்த்திக்காட்ட நான் ஆயத்தமில்லை சில மந்திரிகள் தங்களது தேர்தல் தொகுதிகளுக்கு மட்டுமே சேவை செய்கின்றனர்."

### ஐயாறன்

(4-ம்பக்கதொடர்ச்சி)

தல் சச்சரவுகள் இல்லாமல் போவதுடன், திருவருள் கட்டளை என்று எல்லாரும் பயபக்தியுடன் தங்கள் பொறுப்புக்களைச் செய்யலாம். இந்த முறையே முன்காலத்தில் தமிழர் கைக்கொண்டதாகும்.

* * *

திருமகட்குச் செந்தாமரையாமடி சிறந்தவர்க்குத் தேனய் விளக்கும்மடி, பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்றவடி புகழ்வார் புகழ்ந்தகைய வல்லவடி, உருவிரண்டு மொன்றேடொன்றொவ்வாவடி உருவென்றுணரப்படாதவடி, திருவதிகைத் தென்கெடில நாடனடி திருவீரட்டானத் தெஞ் செல்வனடி.

—திருநா[illegible]சர்

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

### உங்களுக்கு அதிர்ஷ்டம் உண்டா?

கொழும்பு, வெள்ளி

கைத்தொழில் பொருட்காட்சி சுவீப்பின் ஒன்பதாவது சீட்டிழுப்பு நேற்று நடைபெற்றது பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

**முதற் பரிசு**
07 A 0949 ரு. 24,000

**இரண்டாம் பரிசு**
06 G 0509 ரு. 12,000

**மூன்றும் பரிசு**
05 C 0733 ரு. 6,000

**நலாவது பரிசு**
01 S 0897 ரு. 3000

**ஐந்தாவது பரிசு**
13 X 0762 ரு. 1500

பின்வரும் டிக்கட்டுகளும் பரிசுக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 11 N 0925 | 05 N 0063 |
| 07 H 0983 | 10 E 0408 |
| 01 I 0332 | 16 D 0420 |
| 08 L 0269 | 15 D 0975 |
| 04 G 0012 | 03 A 0238 |
| 06 M 0009 | 05 K 0478 |
| 07 E 0031 | 01 R 0837 |
| 13 P 0533 | 04 B 0602 |
| 03 D 0985 | 05 T 0161 |
| 02 G 0672 | 16 S 0592 |
| 08 S 0701 | 05 E 0514 |
| 14 A 0860 | 12 L 0652 |
| 11 T 0464 | 05 G 0468 |
| 12 G 0619 | 15 P 0334 |
| 06 Z 0460 | 04 G 0603 |
| 14 J 0178 | 16 Y 0880 |
| 08 Z 0487 | 07 N 0300 |
| 13 J 0193 | 08 L 0689 |
| 10 L 0594 | 06 N 0304 |
| 11 F 0001 | 13 D 0357 |
| 02 P 0743 | 16 Z 0039 |
| 08 I 0056 | 06 D 0708 |
| 04 G 0358 | 04 E 0453 |
| 02 N 0213 | 16 A 0158 |
| 12 M 0943 | 11 T 0383 |
| 18 U 0390 | 05 W 0524 |
| 07 C 0157 | 13 D 0338 |
| 14 D 0012 | 13 L 0798 |
| 02 F 0185 | 11 G 0460 |
| 14 Y 0554 | 04 K 0899 |
| 13 V 0608 | 09 Z 0245 |
| 07 I 0036 | 07 U 0819 |
| 10 D 0451 | 08 I 0378 |
| 15 Q 0731 | 15 B 0025 |
| 10 I 0968 | 12 V 0735 |
| 06 A 0833 | 09 X 0782 |
| 15 Y 0591 | 01 E 0688 |
| 15 S 0332 | 06 N 0546 |
| 02 T 0415 | 02 W 0571 |
| 16 H 0349 | 10 P 0094 |
| 01 X 0624 | 08 W 0393 |
| 06 B 0749 | 10 R 0531 |
| 02 Z 0360 | 15 Y 0497 |
| 12 U 0468 | 12 Z 0535 |
| 11 L 0715 | 05 I 0657 |
| 01 P 0940 | 15 M 0915 |
| 13 D 0276 | 02 B 0770 |
| 15 V 0699 | 16 J 0221 |

### நாயினல் வந்த வினை!

ராம்காட், (மேற்கு வங்கம்) ஏப். 12

ஹாரிங்காட்டாபொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் விஷ உணவு அருந்தியதனல் ஆறுபேர் மரணமடைந்தனர். இவர்களில் மூவர் பெண்கள். விஷ உணவு உட்கொண்டவர்களில் ஒருவர் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையிலிருக்கிறார். இச்சம்பவத்திற்கு ஒரு நாய்தான் காரணமெனக் கூறப்படுகிறது.

வீட்டில் வளர்த்துவந்த நாய் சமீபத்திலுள்ள விவசாயப்பண்ணையிலிருந்து இறந்த ஒரு கோழியைக் கொண்டுவந்தது. கோழியின் இறைச்சியைச் சமையல்செய்து குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரும் சாப்பிட்டனர். பின் அவர்கள் மயக்கமுற்று இறந்தனர். எஞ்சிய கோழி இறைச்சியை உட்கொண்ட 7 கோழிகள், 2 நாய்கள், 1 பூனை ஆகியனவும் இறந்தன.

### பிக்குகொலைவழக்கில் எதிரிகள் விடுதலை

கொழும்பு, வெள்ளி

கொழும்பு அஸைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. வீ. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 'பிக்குகொலைவழக்கில்' எதிரிகள் விடுதலைசெய்யப்பட்டார்கள். ஜூரிகளில் ஐந்து பேர் எதிரிகளைச் சுற்றவாளிகள் எனத் தெரிவித்ததால், நீதியரசர் எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ம் திகதி தாலருக்கருமய கோனிலைச் சேர்ந்த கத்தன்கல ராஜிந்த தேரோவை, இரத்தினபுரியைச் சேர்ந்த தாமோனச்சு பொடியா, தாமேனெச்சுபின் சுதுவ ஆகியோர் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

### வடிசாராயவழக்கில் எதிரி விடுதலை

மாவிட்டபுரம், வெள்ளி

புன்னலைக்கட்டுவனைச் சேர்ந்த நாகன்வயிரவன் சட்டவிரோதமாக எழுபத்திரண்டுரும் வடிசாராயம் வைத்திருந்ததாக சன்னகப் பொலிசாரால் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதிதிரு.வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பொலிசார் வழக்கை ஒத்திவைக்கும்படியும் முக்கிய சாட்சியானகான்ஸ்டபிள் கனகசபை சுகயீனமாக இருப்பதாகவும் தெரிவித்தார்கள். இதை ஆட்சேபித்து எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் பொலிசார் முன்னரே ஏழுமுறை வழக்கை ஒத்திவைக்கச் செய்துவிட்டார்களெனவும் மேலும் ஒத்திவைப்பதை தான் ஆட்சேபிப்பதாகவும் கூறினர். நீதிபதி வழக்கறிஞரின் ஆட்சேபனையை ஏற்று பொலிசார் வழக்கு விசாரணைக்கு ஆயுத்தமில்லாதபடியால் எதிரியை விடுதலை செய்தார்.

### சோபகிருது வருஷ வாக்கிய பஞ்சாங்கம்

"சோபகிருது தன்னில் சோபனங்கள் உண்டாகும்; மாரி ஒழியாமல் பெய்யும்" என்று நல்வாக்குத் தெரிவித்துக்கொண்டுயாழ்ப்பாணம் கொக்குவில் இ. சி. இரகுநாதையர் அவர்களால் கணிக்கப்பெற்ற சோபகிருது வருஷ வாக்கிய பஞ்சாங்கம் வழக்கமான எல்லா அம்சங்களும் பொலிய வெளிவந்திருக்கிறது. 95 பக்கங்கள் கொண்ட இப்பிரசுரத்தின் விலை ரூ. 1-50 ஆகும்.

### பரிசுகள் கோரப்படவில்லை

கொழும்பு, புதன்

198-வது ஆஸ்பத்திரி சுவீப்பில் இரண்டாவது ,மூன்ருவது பரிசு பெற்ற 04 X 0636, 15 G 0841 இலக்கமுடைய பரிசுகள் இன்னும் கோரப்படாமலிருக்கின்றன.

# புதுவருடத்தில் தமிழர்-சிங்களவர் உறவுக்கு வழிவகை காணப்படும்

## உலகில் பெரிய குமுறல்கள் இருக்காது;இந்தியாசீனுமோதாது

(சோதிடக் கலைஞர் க. வேலுப்பிள்ளை)

**"நாளை மலரும் சோபகிருது வருடத்தில் குழப்ப நிலைகள் நீடித்தாலும் பெரிய குமுறல்கள் தவிர்க்கப்படும். உலக நாடுகளில் ஆத்மீகம் வளரும். அமெரிக்காவின் செல்வாக்கு உயரும். எமது நாட்டில தமிழர்-சிங்களவர் உறவுக்கு வழிவகைகள் காணப்படும்" என்று திருகோணமலையைச் சேர்ந்த பிரபல சோதிடர் திரு. க. வேலுப்பிள்ளை கூறுகிருர்.**

ஏப்ரல் 14-ந் திகதி அதிகாலை 1-34 நிமிஷத்தில் மலரும் சோபகிருது வருஷ பலன்:-

அர்க்காதிபதி சனி கேது கூடி உதயத்திலாட்சி பெற்றிருக்க, நீரஸாதிபதி செவ்வாய் ராகு கூடிப்பார்க்க, அமைச்ச ராதிபதி சூரியன் புதன் கூடி உச்சம் பெற்றிருக்க. இரஸாதிபதி வியாழன் 3-இல் ஆட்சி பெற்றிருக்க-

### உலக நாடுகளில்

உள்நாட்டுக் குழப்பங்களுக்கு இடமுண்டு. இராஜ செவ்வாய் ஆகவே, இராணுவப் புரட்சிகள் ஆங்காங்கே தலை தூக்குவதற்கு இடமுண்டு. பல நாடுகளில் சனநாயக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு அங்கெல்லாம் இராணுவ ஆட்சி ஏற்படுவது சாத்தியமே. அக்கினி ஆயுத பீடைகளும், எரிமலைகள் குமுறுதலும், அரசியல் போராட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். மேலை நாடுகளில் இயந்திர வளர்ச்சிக்குச் செல்வாக்குண்டு. கெடுபிடி யுத்தம் நெருங்குவதாக ஒரு பிரமை ஏற்பட்டபோதிலும், வல்லரசுகள் மத்தியில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வளரும். இதனுல் குமுறல்கள் தவிர்க்கப்படும்.

### அமெரிக்கா

உலக நாடுகளுக்கிடையில் அமெரிக்காவின் செல்வாக்குப் பெருகுவதற்கு வாய்ப்புகள் அதிகரிக்கும். குறிப்பாக ஆசிய நாடுகளில் அதன் செல்வாக்கு நல்ல நிலையில் இருக்கும். ஜப்பான், இலங்கை போன்ற நாடுகளில் அமெரிக்காவின் நல்லுறவு வளரும்.

### ரஷ்யா

இந்த நாடு சமாதானப் பாதையில் அதிக ஆர்வம் காட்டும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இந்த நாட்டு மக்களிடையே பெருகும். இந்த நாட்டின் பிரதமர் குருஷ்சேவின் செல்வாக்கு வளர்பிறையாகவே இருக்கும். ரஷ்யாவுக்கும் சீனுவுக்குமிடையில் கொள்கைக் குழப்பங்கள் தவிர்க்கப்பட்டு, சீன ரஷ்யாவின் நட்பிலேயே இருக்க விரும்பும்.

### இந்திய - சீன எல்லைத்தொல்லை

குழப்பமான சூழ்நிலை தொடர்ந்திருந்தாலும், மோதல்கள் தவிர்க்கப்படும் இரு நாடுகளின் பிரதமர்களும் கூடிப் பேசும் வாய்ப்புகளு இடமுண்டு. இதன் மூலம் நல்ல திருப்பமே உருவாகலாம்.

### இலங்கை

செவ்வாய் கிரகம் நீசம் பெற்றிருப்பதால், இலங்கையின் செல்வாக்கு உலக நாடுகள் மத்தியில் குன்றுவதற்கு இடமுண்டு. எனினும் அமெரிக்காவுடன் அதன் கசப்பு மனப்பான்மை தவிர்க்கப்படும். எதிர்க்கட்சிகளின் முன்னணி வெறும் "புஸ்வாணமாக" அடுத்த தேர்தலுக்கு முன்பே மாறிவிடும். தீவின் பல பாகங்களிலும் சம மழை பொழியும் சுழிகாற்று, புயற்காற்று முதலியவற்ருல் சேதங்கள் ஏற்படலாம். பொருட்களின் விலைகள் விஷம்போல ஏற்றமடையும். சிறுதானியங்களின் விலைகளில் இறக்கம் காணப்படும். கடற்றொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஏற்றம் காணப்படும். பொருளாதாரத்துறையில் இவர்களுக்கு நல்ல மாறுதலுக்கு இடமுண்டு. தேசவிரோத எண்ணமுடையவர்கள் உடனுக்குடன் அடக்கப்படுவார்கள். இன்று ஆட்சிபீடத்திலிருப்பவர்களின் செல்வாக்கு மங்க ஆரம்பிக்கும். மாதர்களுக்கு மகிழ்ச்சிகரமான விடயங்கள் நடைபெறும். இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களைப் பொறுத்தவரையில் பல வீனமான சூழ்நிலை தற்பொழுது தலைதூக்கிய போதிலும், ஒற்றுமை வளர்ந்துகொண்டேயிருக்கும். இவர்களுக்கு உடனடியாகப் பயன் கிடைக்காவிட்டாலும், நன்மைக்கு இடமுண்டு. ஒரு வட்டமேசை மகாநாட்டின் மூலம் இந்த நாட்டின் இரு பெரும் சமூகங்களுக்கு மத்தியில் ஓரளவுக்காவது சமரச மனப்பான்மை காணப்படும். மொழிவெறி, இனவெறி போன்ற வேண்டாத தொல்லைகள் மறைய ஆரம்பிக்கும்.

### தொழிலாளர்கள்

சிறிதுகாலம் மந்தநிலையிலிருந்த தொழிற்சங்கங்கள் மேலும் துரித வேகத்தில் வளர ஆரம்பிக்கும். இங்கிலாந்தில் தொழிலாளர்களின் செல்வாக்கு அதன் உச்சக்கட்டத்தையடையும். எமது நாட்டைப்பொறுத்தவரையில் இயந்திரத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் வாழ்க்கைத் தரம்பாதிக்கப்படுவதற்கு இடமுண்டு. மனக்கவலைகளின் காரணமாகக் கொலைகள் பெருகும். தெய்வ வழிபாட்டில் ஆர்வம் குறைய ஆரம்பிக்கும். வேலைநிறுத்தம் போன்ற தொல்லைகள் மீண்டும் பெருமளவில் தலைதூக்க ஆரம்பிக்கும். தொற்று நோய்கள் நமது நாட்டில் ஆங்காங்கே தலைகாட்டலாம்.

## ராசிவாரியாகப்பலன்

### மேஷ ராசியில் பிறந்தவர்களுக்கு

தனக்குறைவு.தானியநட்டம், பொன்-பொருள் விரையம், பொதுசனப் பகை, சிந்தனைக் குழப்பம், சிநேகித பீடை, நம்பிக்கெடுதல், நஷ்டமடைதல், குடும்பக்கவலை, குருதொழில் பீடை, கல்விக் குழப்பம், கடுஞ்சினச் சொற்கள் ஏற்படலாம.

### இடப ராசியில் பிறந்தவர்களுக்கு

பொருட்செலவு, புண்ணிய விருப்பு, உற்ருர், உறவும்,உபய செலவும், அறிவுடமை, அன்னியர் உதவியும், ஆசார ஒழுக்கம். அதிர்ஷ்டப்பொருள் வரவும், தொழிற் பெருமையும், தெய்வ குரு பக்தியும், கல்விச் சிறப்பும், கவலைக்குறைவுமுண்டாம்.

### மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு

உத்தியோகக்கவலை, உடல் நலக்கவலை, சட்டம் தவறுதல், சஞ்சல மனம், தொடர்பாகக் கஷ்டநிலை, ஆயுத பீடை,ஆசாரக் குறைவு, கல்வி சமவிருத்தியும், இல்லச் சீர்திருத்தமும், வஞ்சகர் உறவால் வாகன நஷ்டமும், இராச கவலையும், இருப்பிட மாற்றமும், வளர்ச்சியடையும்.

### கடக ராசியில் பிறந்தவர்களுக்கு

புண்ணியவிருப்பும், பொன்-பொருள் விருத்தியும், பணிணிய பொருள் பண்புடன் சேருதல், கன்னியர் உறவால் கவலையடைதல், எண்ணிய கருமம் இருவரால் தடைப்படல், பிதாவழிச் சுகமும், பெரியோர் உறவும், தந்தையின் சொத்து தனையனை வந்தடைலும், தன் தொழில் விருத்தியுமுண்டு. கல்வித்துறையில் மதிப்பு உயரும்.

### சிங்க ராசியில் பிறந்தவர்களுக்கு

சத்துரு ஜெயம், மித்துரு பகை, பொன்-பொருள் நஷ்டம், பொதுசனக் கஷ்டம், ஆதாரப்பகை, அன்னக்குறைவும், இனசன வெறுப்பும்,இன்னல் பலவும், மக்களின் சோர்வால் மனைவியின் துன்பமும், திட்டமிடுவதால் கஷ்டங்கள் நீங்கும், கல்விக்கவலையும் மறைவதற்கிடமுண்டு,

### கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு

கன்னியர் உறவு, களேஸ்திர சுகம் எண்ணிய கருமம் எளிதில் கைகூடல், தன்தொழில் விருத்தி தனத்தையுண்டாக்கும். வரும் தொழில் உயர்வை வஞ்சகர் தடுக்கினும், பெரியோர் உறவால் பெருமைகள் உண்டு. இருதய நோயும், இடர்களும் நீங்கும். கல்விக்கு நன்று, சத்துரு பகைவர் சடுதியில் மறைவர்.

### துலாம் ராசியில் பிறந்தவர்களுக்கு

எதிரிபகை, கவலை, ஆயுத பயம், தன்னிலை மாற்றம், தாமத புத்தி, வாகனக்கஷ்டம் வரவின் மிஞ்சிய செலவு, மாதுரு மக்களுக்கு மந்தித்த நோய்களுண்டு. வாதித்த எதிரிக்கு வசதிகள் பலவுண்டு, போதித்த கல்விக்குப் புகழுண்டு.

### விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு

பாக்கிய நலம் மிகவுண்டு, நோக்கிய கருமங்கள் நன்று. நோய்பிணி தீரும், சேர்மையால் உதவியியுண்டு. அன்னியர் உதவியும், அடிமைகள் நலனும் எளிதிற் கிடைக்கும். மனைவியாய் உண்டு. மக்கள் நன்மை பயப்பர். கல்வி நன்று கஷ்டம் தீரும். கன்னியர் உறவு களிப்பினில் முடியும்.

### தனுராசியில் பிறந்தவர்களுக்கு

வாகன சுகமுமுண்டு, வந்திடும் பூமிலாபம். மாதுரு பிணியுமுண்டு. மாயமாய்த் தீர்ந்து போகும் வாத நோய், குஷ்டம்நீங்கும். வருமதி வந்து சேரும். பாதகர் நன்றி சொல்வர், பாலகர் கல்விஓங்கும். காவிலே விலங்கு பூண்டுகைதியாய் நின்றவர்க்கும் முடிவினில் சுகமே காணும், முயற்சியால் வெற்றிதாமே.

### மகர ராசியில் பிறந்தவர்களுக்கு

அடிமைக்குறைவு, அன்னிய வாசம், பண்ணிய பொருள், பகைவரால் நாசம், எண்ணிய கருமத்தில் இடர்பலவுண்டு, கல்விக் கஷ்டமும், கவலையுமுண்டு, ஊண் சுகக்குறைவும் உறக்க மிகுதியும், சோதரக் கவலையும் தொடர்ந்தே இருக்கும்.

### கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு

வாக்குச் சித்தி, வரவு சமம். நோக்கும் கருமம்சித்தி பெறும். பார்க்கும் தொழிலில் பலிதமுண்டு. சேரும குடும்பம் சிறப்புடன் வாழும். கல்வித்துறையில் கழிப்பு மிகுதி. பொது ஜன மதிப்பும், புகழும் ஓங்கும்.

### மீன ராசியில் பிறந்தவர்களுக்கு

சிநேகிதர் பகையும், சிந்தனைக் குழப்பமும், இராச கவலையும், இடர் பல வருதலும், நீசர் தொல்லையும், தொழில் முடக்கமும், மந்தா கற்பநோய் மதலைகள் பிணியுமுண்டு. பூமிபிணக்கும், பொன்-பொருள் நஷ்டமும், இல்லறச் சோர்வும். இறைவழி நாட்டமும், கல்வியில் மந்தமும் கவலையும் மிகுதி

---

# மேதினக் கூட்டம்

## ஐக்கிய முன்னணியிடையே அபிப்பிராய பேதம்?

கொழும்பு, வெள்ளி

மே தினக் கூட்டத்தைச் சிறப்பாக நடத்துவதில் இடதுசாரிஐக்கிய முன்னணி ஈடுபட்டுக்கொண்டிருக்கையில், குறிப்பிட்ட கூட்டத்துக்கு சில ஸ்தாபனங்களை அழைப்பதில் இடதுசாரி ஐக்கிய முன்னணி கட்சிகளுக்கிடையே அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மேதினக் கூட்டத்துக்கு இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸையும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸையும் அழைப்பது சம்பந்தமாகவேதான் இடதுசாரி ஐக்கியமுன்னணி கட்சிகளுக்கிடையே அபிப்பிராயபேதம் நிலவுவதாகத் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், மேதினக் கூட்டத்துக்கு இ. தொ. காங்கிரஸையும், ஜ. தொ. காங்கிரஸையும் அழைப்பதை மக்கள் ஐக்கிய முன்னணி விரும்பவில்லைபோல் தெரிகிறது என்று கூறினர். இதே நேரத்தில், குறிப்பிட்ட இரண்டு கட்சிகளையும் அழைப்பது சம்பந்தமான லங்கா சமசமாஜகட்சி, மக்கள் ஐக்கியமுன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, ஆகியவற்றின் முடிவை இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

போதுச்சேவை தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தின் அதிகாரியொருவர் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினர். மே தினத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்துக்கு யார் தலைமைவகிக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு அவ்வளவு அக்கறையில்லை. ஆனல் ஒரு பிரச்னை தோன்றியுள்ளது. தொழிற்சங்கள் யாவும் ஒன்று சேர்ந்து தனியாக மேதினக் கூட்டத்தை நடத்துவதா அன்றி அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து கூட்டங்களை நடத்துவதா என்பதுதான் இப்பொழுது எழுந்துள்ள கேள்வி."

இதுசம்பந்தமாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. ஏ. அஸிஸ் தெரிவிக்கையில் கூறியதாவது:

"தொழிலாளர்களின் ஸ்தாபனங்களை மேதினக் கூட்டங்களில் சேர்த்துக்கொள்வதில் தோல்விகண்டால், மேற்கொண்டு எப்படியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானிக்கும். தொழிலாளர்களுடன் சேர்ந்துகொண்டு கூட்டாக மேதினக் கூட்டத்தை நடத்துவது சம்பந்தமாக, ஜ. தொ. கா. கிளைகள், மற்றைய தொழிற்சங்கங்களுடன் பதுளை, எட்டியாந்தோட்டை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் பேச்சுக்கள் நடத்தியிருக்கிறது."

## கூட்டுறவுப் பண்ணைகள்

கொழும்பு, வெள்ளி

மக்கள் வங்கியின் பணஉதவியுடன் கூட்டுறவுப் பண்ணைகள் ஆரம்பிப்பதுபற்றிய ஒரு தீர்மானத்தையிட்டுக் கூட்டுறவு ஸ்தாபனம் ஆலோசனை செய்துவருகிறது, படித்த வாலிபர்களுக்குப் பண்ணைகளில் வேலைவசதி செய்து கொடுப்பதோடு. ஒவ்வொரு பண்ணையிலும் உள்ள வருமானம் அதன் தேவைக்குப் போதியளவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பண்ணைகளின் நிலைமைக்கேற்றபடி, நெல், காய்கறி வகைகள், பழவகைகள் பயிரிடப்படுவதோடு, மாடுகள், கோழிகள் வளர்க்கப்படும். மக்கள் வங்கி பண்ணைகளுக்காக முற்பணமாக ஒரு தொகை அளிக்கும். இநத முற்பண முயற்சி பயனளிக்குமானல், நாட்டின் பல பாகங்களிலும் பண்ணைகள் ஆரம்பிக்கப்படும்.

## ஆஸ்பத்திரியில் தண்ணீர்ப்பஞ்சம்!

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை (புலோலி) அரசினர் வைத்திய சாலையில் கடந்த மூன்று வார காலமாக தண்ணீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகச் கூறப்படுகிறது.

தண்ணீர் இறைக்கும் இயந்திரம பழுதடைந்து விட்டதே இதற்குக காரணம் எனத் தெரிய வருகிறது.

நோயாளிகட்கு குடி நீர் உட்பட வைத்தியசாலையின் தேவைக்கு நீர் பெரும் சிரமத்துடன் வெளியே இருந்து எடுக்க வேண்டிய நிலை தொடர்ந்து வருகிறதாம்,

மருந்து கலப்பதற்குத் தண்ணீரும வெளியே கைவாளிகளில் கொண்டுவரப்படுவதுடன் ஊழியர்கள் குளிப்பதற்குக்கூட வெகுதூரம் சென்று திரும்பவேண்டி உள்ளதாம்.

## உலகவாலிபர் தினம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

உலக வாலிபர் தினமும் காலனி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட தினமும் வல்வெட்டித்துறைக் கடற்கரை மைதானத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்கங்களின் யாழ் பிரதேசச் சபையினல் இம்மாதம் 24-ந் திகதி நடத்தப்படவிருக்கிறது.

நீச்சல்வீரன் ஆனந்தன் தலைமையில் இவ்விழா நடைபெறவிருக்கிறது. உடுப்பிட்டியிலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் புறப்பட்டுச்செல்லும். இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களோடு இலங்கை சர்வகலாசாலை சோஷலிஸ்ட் மாணவர் சங்கம், தேசிய மாணவர் சம்மேளனப் பிரதிநிதிகளும் பேச்சாளர்களாகக் கலந்துகொள்ள இருப்பதாகத் தெரிகிறது.

# புதுவருட விளையாட்டு போட்டி ஏற்பாடுகள்

பருத்தித்துறை, வெள்ளி

தேசியபுத்தாண்டு விழாவையொட்டி பருத்தித்துறை பொலிசாரால் ஏற்பாடுசெய்யப்பட்ட 50 மைல் சைக்கிள் ஓட்டம் புதுவருடத்தன்று காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகவிருக்கிறது.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 60 க்கு அதிகமான வாலிபர்கள் கலந்துகொள்ளும் இப்போட்டி ஓட்டங்கள் பருத்தித்துறையில் இருந்து ஆரம்பமாகி வரணி, கொடிகாமம், பளை, புதுக்காடு, மருதங்கேணி, நாகர்கோவில், வல்லிபுரம், தும்பளை, முனை ஆகிய இடங்கட் கூடாக பருத்தித்துறை வாடிவீட்டை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் வெற்றி பெறும் முதல் மூவருக்கும் பரிசுகள் வழங்குவதுடன் 15 பேர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படுமாம். பருத்தித்துறை தேசியபுத்தாண்டு விழாக்கொண்டாட்ட நிகழ்ச்சிகட்கு வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. வான்சன்டன் தலைமைவகிப்பார் எனத் தெரியவருகிறது.

முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெறும் இவ் விழாவில் கைப்பந்தாட்டம்,, தாச்சி மற்போர், கயிறிழுத்தல், முதலான பல்வேறு தேசிய விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப்போட்டிகளும் 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியும் நடைபெறவிருக்கின்றன.

இரவு நடைபெறும் பரிசளிப்பு விழாவில் வடபகுதி பொலிஸ் அதிபரின் பாரியார் திருமதி வான்சன்டன் வீரர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவிப்பார்.

## அரியாலை யுனைடெட் விளையாட்டுக் கழகம்

### காரியதரிசி ராஜினமா

யாழ்ப்பாணம், வெள்ளி

அரியாலை யுனைடெட் விளையாட்டுக் கழகத்தின் காரியதரிசி திரு. இ. கே. குமரையா தமது பதவியைத் திடீரென ராஜினமாச் செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

திரு. குமரையா கடந்த 18 ஆண்டுகளாக அரியாலை யுனைடெட் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவராகவும் காரியதரிசியாகவும் பணிபுரிந்து வந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அரியாலை யுனைட்டெட் விளையாட்டுக் கழகம் புகழ் பெற்று விளங்குவதற்கு இவரே காரணமாக இருந்துள்ளார் என்பதனை ஏனைய விளையாட்டுக்கழகங்கள் தெரிவித்துள்ளன. திரு. குமரையாவின் ராஜினமாவுக்குக் காரணம் என்ன என்பது பற்றி ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை.

# வானெலி நிகழ்ச்சிகள்

## சனி 13-4-63

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பி. எஸ். மணிஐயங்கார்—வயலின்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கே. வேந்தனர்—பேச்சு, 9-30 என். சண்முகரத்தினம்-பாட்டு.

## ஞாயிறு 14-4-63

காலை 6-45 பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை — நாகஸ்வரம், 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 ஆர்.எஸ்.ரகுநாதய்யர்—பேச்சு, 8-30 உற்சவம்—இசைச்சித்திரம், 9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பி. வெள்ளைச்சாமி— முகவீணை, 5-45 பேச்சு, 6-10 குரல்வகை, 6-15 புதுவருஷ விசேஷ நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 9-45 நிலைய ஒலிப்பதிவுகள், 10-15 தேர்ந்த இசை.

## திருச்சி

## சனி 13-4-63

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 மாயூரம் எஸ். சிவஸ்வாமி—வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரலிசை, 2-10 மாயூரம் எஸ். சிவஸ்வாமி—வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 வந்தது வசந்தம்—இசை நாடகம், 8-40 தேசபக்திப்பாடல்கள், 8-45 ரயில்வே வாரம் விசேஷ நிகழ்ச்சி.

## ஞாயிறு 14-4-63

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 ஆண்டுபிறந்தது—இசை நிகழ்ச்சி, 8-15 எம். எம். தண்டபாணிதேசிகர்—பாட்டு, 9-15 இரண்டாவது வானெலி பட்டிமண்டபம்.

பகல் 12-00 [illegible], 12-30 சூரியகாந்தி—சோபகிருது புத்தாண்டு மலர், 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 வருக வருக மெல்லிசைநிகழ்ச்சி, 3-00 சீதாமணி ஸ்ரீனிவாசன்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 ஈஸ்ட்டர் துதிப்பாடல்கள், 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கொட்டுமுரசே—சித்திரம், 7-45 தாயைப் போற்றுமின்—இசைச்சித்திரம் 9-15 தேசபக்திப்பாடல்கள் 9-45 நாமகிரிபேட்டை [illegible] கிருஷ்ணன்—நாகஸ்வரம்.

ஹார்லிக்ஸ் அளிக்கும் நன்மைக்கு ஒரு உதாரணம்:






விளையாட்டுகளிலும், உடல் பயிற்சிகளிலும் எனக்கு அதிக ஆர்வமில்லை. நான் வெகு விரைவில் சோர்ந்து விடுகிறேன். சேர்ந்த பின் ஏனைய பிள்ளைகளுடன் சரிசமதையாக நின்று பிடிக்க முடியாவிடில் அவமானம்! ஆனல் எடுத்துக் கொள்ளத் தகுதியில்லை என்று நிராகரித்து விட்டால் அதைவிட அவமானமல்லவா? என்ன செய்வதென்று விளங்காமல் தவித்துக் கொண்டிருந்த [illegible] ஒரு நாள் டாக்டரின் ஆலோசனையை [illegible].






நோய்க்குப் பின் உடல் தேறுபவர்களுக்கு டாக்டர்கள் ஹார்லிக்ஸ் அருந்தும்படி சிபார்சு செய்வது நானறிந்ததே! ஹார்லிக்ஸ் அவர்களுக்குப் பலன் அளிக்கிற தென்றல் [illegible] மேலதிக பலனை அளிக்கும். ஆகவே டாக்டரின் ஆலோசனையின்படி ஹார்லிக்ஸ் அருந்தி வர [illegible].



நான் அப்படிச் செய்தது என் நல்ல காலம்தான்! மிகச்சிறந்த பரிசுத்தமான பாலுடன் கோதுமை மா, மால்டெட் பார்லி இவற்றின் சததுகள் சேர்ந்த ஹார்லிக்ஸ் ஆச்சரியகரமான பலனை அளித்துள்ளது. என்னைப்போல் பல மாணவர்கள் நாள் தவருமல் ஹார்லிக்ஸ் அருந்துகிருர்கள் என்ற [illegible] யும் பிறகு எனக்குத் தெரிய வந்தது.




ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

# தாயும் மகனும் தற்கொலை; அனலைதீவில் சம்பவம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

மகள் தற்கொலை செய்து இறந்த மனவேதனையால் தாயும் நஞ்சுத்திராவகம் அருந்தித்தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்று அனலைதீவில் நடைபெற்றுள்ளது.

அனலைதீவு இரண்டாம் வட்டார வாசியான சுப்பிரமணியம் நாகலிங்கத்தின் மகன் கணேசு (வயது 21) நாகலிங்கத்தின் மனைவியும் கணேசுவின் தாயாருமான தெய்வானைப்பிள்ளை (வயது 40) ஆகிய இருவருமே தற்கொலை செய்து கொண்டார்கள்.

தற்கொலையுண்ட கணேசு சிறிதுகாலமாகத் தந்தையுடன் மனஸ்தாபப்பட்டு இருந்தார் எனறும் அதனால் மனக்கவலையடைந்து இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

நேற்று நண்பகல், கணேசு தனது வீட்டில் இருந்து கால் மைல் தூரத்தில் உள்ள புகையிலைத் தோட்டத்திற்கு வழக்கம் போல் சென்றாராம். நேரம் கடந்தும் சாப்பாட்டுக்கு மகன் வராமையால் தாயார் மகனைத்தேடித் தோட்டத்திற்குச் சென்ற போது மகன் கணேசு இறந்துகிடக்கக் கண்டாராம். மகன் நஞ்சு குடித்து தற்கொலை செய்த துயரம் தாங்காது பக்கத்தில் உள்ள கடலில் தாய் விழுந்து இறக்க முற்பட்டபோது பக்கத்தில் உள்ளவர்களால் தடுக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

உடன் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு கிறிது நேரத்தின் பின் குணமடைந்த தாய் வீட்டில் வைக்கப்பட்டு இருந்த நஞ்சுத்திராகவத்தை யாரும் காணுது குடித்துத் தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அனலைதீவு உடையார் திரு. வைத்திலிங்கம் மரண விசாரணை நடத்தினர். விசாரணையின் பின் தற்கொலைகள் எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

## மெக்காவுக்கு பிரயாணம்

கொழும்பு, வெள்ளி

செலாவணிக் கட்டுப்பாட்டுக் கந்தோரின் வழக்கமான வேலைகள் மெக்காவிற்கு செல்வோர்களின் ஏராளமான விண்ணப்பங்களினால் தாமதமேற்பட்டுள்ளது. வேறு விஷயங்கள் சம்பந்தமாக இக்கந்தோருக்கு அழைக்கப்பட்ட ஏராளமான மக்கள் ஏமாற்றமடைந்தனர். உதவிக்கட்டுப்பாட்டு அதிகாரியைக் காண வந்தசிலர் மூன்று அல்லது நான்கு மணித்தியாலங்கள் வரை காத்திருந்தனர்.

கடந்த வருடங்களிலும் பார்க்க இந்த வருடம் மெக்காவிற்கு பிரயாணம் செய்யும் ஏராளமானவர்களின் விண்ணப்பங்கள், செலவாணிக்கட்டுப்பாட்டிற்கு வந்திருப்பதாகவும் இந்த விண்ணப்பங்களைக் கவனிக்க அதிகநேரம் பிடிப்பதால் அதிகமான அதிகாரிகளுக்கு வேறு வேலைகளில் தலையிட நேரம் இல்லாமலிருப்பதாகவும் செலாவணிக்கட்டுப்பாட்டதிகாரி யொருவர் தெரிவித்தார்.

இனிமேல் செலவாணிக் கட்டுப்பாடு மிகக்கடுமையாக இருக்கும் என மக்கள் கருதியபடியால்தான் இவ்வருடம் ஏராளமானவர்கள் மெக்காவிற்குப் பிரயாணஞ்செய்ய முன்வந்துள்ளார்கள்.

## காவிரிக்கரையில் எண்ணை முயற்சி

புதுடில்லி, ஏப்ரல் 12

தமிழ் நாட்டில் காவிரி நதி தீரத்தில் எண்ணை கண்டுபிடிக்கும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## சைக்கிளோட்டப் போட்டி

### புதுவருடத்தினத்தில் ஏற்பாடு

யாம்ப்பாணம், சனி

புதுவருட தினத்தையொட்டி கோப்பாய் இளைஞர் விளையாட்டுக் கழகம் 15 மைல் சைக்கிளோட்டப்போட்டி ஒன்றினை நடத்த ஏற்பாடுசெய்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை இச்சைக்கிளோட்டப் போட்டி நடைபெறுகின்றது. கோப்பாயிலுள்ளவர்களுக்கான இச் சைக்கிளோட்டப் போட்டியைத் தொடர்ந்து மாலையில் விளையாட்டு விழாவும் நடைபெறவிருக்கிறது.

கோப்பாய் எம். பி. திரு மு. பாலசுந்தரம் பரிசுகளை வழங்குவார். இன்று மாலை கைப்பந்தாட்டப் போட்டி ஒன்றும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## எழுத்தாளர் மகாநாட்டு கூட்டங்கள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் முற்போக்கு எழுத்தாளர் மகாநாட்டையொட்டிய தயாரிப்பு வேலைகளைப்பற்றி ஆலோசிப்பதற்காக யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் மகாநாட்டுத் தயாரிப்புக்கூட்டமொன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

இதைத் தொடர்ந்து காரைநகரில் 16-ந் திகதியும், குரும்பசிட்டியில் 17-ந் திகதியும், சாவகச்சேரியில் 18-ந் திகதியும், கோப்பாயில் 21-ந் திகதியும் மகாநாட்டு ஆதரவாளர்களின் கூட்டங்கள் நடைபெறும்.

இக்கூட்டங்களில் மகாநாட்டு அமைப்புக் குழுவைச் சார்ந்த டாக்டர் நந்தி, ஈழத்துச்சோமு க. கைலாசபதி, டொமினிக் ஜீவா, சொக்கன், இளங்கீரன், கா. சிவத்தம்பி முதலியோர் கலந்துகொண்டு மகாநாட்டு முக்கியத்துவம் பற்றிப் பேசுவார்கள்.

## நிதான விலைக்கு மீன் விற்பனை

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு கூட்டுறவு விற்பனை நிலையத்தினரால் சுழிபுரம் சத்தியக்காட்டுச் சந்தை, தொல்புரம் மூட்டுச் சந்தை ஆகியனவற்றில் நிதான விலைக்கு மீன் விற்பதற்கு, சுழிபுரம் கிராம சபை தனது மாதாந்தக் கூட்டத்தில் அனுமதி கொடுத்துள்ளது. இதன் மூலம் மக்களின் மீன் தேவை ஓர் பகுதியாகிலும் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உரும்பிராயில் தமிழியக்கம்

யாழ்ப்பாணம், சனி

இன்று உரும்பிராய் உபதபாற் கந்தோர் முன்னிலையில் தமிழியக்கம் ஆரம்பிக்கப்படும். தமிழரசுக் கட்சியின் உரும்பிராய் கிளைத் தலைவர் திரு. கனகசுந்தரம தலைமையில் ஆரம்பமாக விருக்கும் இவ்வியக்கத்தின் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொள்வார்கள்.

## பக்தவத்சலம் வாக்குறுதி

சென்னை, ஏப்ரல் 12

தமிழ் நாட்டில் மொழிச் சிறுபான்மையினருக்குச் சகல கல்வி வசதிகளும் அளிக்கப்படும் என கல்வி மந்திரி திரு. பக்தவத்சலம் உறுதியளித்திருக்கிறார்.

## இரு மரண விசாரணைகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்லையா சோமசுந்தரம் என்பவர் அல்வாயில் சென்றுகொண்டிருக்கும்போது சின்னத்துரை கார்த்திகேசு என்பவர் ஓட்டிச்சென்ற மோட்டார் சைககிள் சோமசுந்தரத்தை மோதியது சோமசுந்தரத்திற்கு மண்டையில் காயமேற்பட்டதைத் தொடர்ந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானர். இதுபற்றி மரணவிசாரணை நிகழ்த்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் கார்த்திகேசுவை 500 ரூபா பிணையில் விடுதலை செய்து இம்மாதம் 23-ந் திகதி பருத்தித்துறை கோர்ட்டுக்கு வருமாறு உத்தரவிட்டார்.

மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரி திரு ஏ. வைத்திலிங்கம் சாட்சியமளிக்கையில் மண்டையில் ஏற்பட்ட காயம்தான் மரணத்திற்கு காரணமெனத் தெரிவித்தார்.

மேற்படி விபத்தில் கார்த்திகேசுவிற்கும் காலில் காயமேற்பட்டிருந்தது.

### தெல்லிப்பழையில்

தெல்லிப்பழை கலக்கிடாவத்தைதயைச் சேர்ந்த நன்னியன் கந்தன் என்பவரின் மரணம் குறித்து மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் ஏற்பு காரணமாக இம்மாதம் 4-ந் திகதி அனுமதிக்கப்பட்ட அவர் 10-ந் திகதி மரணமானர்.

இறந்தவரின் சகோதரரான முருகையா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

"மார்ச் மாதம் 10ந் திகதி மரணமானவருக்கும் சுணபதி கதிரன் என்பவருக்குமிடையில் சண்டை ஏறபட்டது. கதிரன் அடித்ததும் கந்தன் கீழே விழுந்தான். உடனே அவர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சுகமடைந்து வீடு திரும்பினர். பின்னர் மார்ச் 24-ந் திகதி இறந்தவருக்கு ஏற்பு வந்தது. அவரை இம்மாதம் 4-ந் திகதி யாழ்ப்பாணம் சுபரியாஸ்பத்திரியில் அனுமதித்தோம். அவர் 10-ந்திகதி அங்கு மரணமானர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## இரண்டு வருட சிறைத்தண்டனை

மாவிட்டபுரம், வெள்ளி

அச்சுவேலியைச் சேர்ந்த செல்லமுத்து நடராசா என்பரின் வீட்டை உடைத்து ரூபா 300 பெறுமதியான பொருட்களையும் பணத்தையும் திருடியதாக மட்டக்களப்பைச் சேர்ந்த சைமன் லியனகே ராசா அல்லது முகமது சுல்தான் லத்தீப் என்பவர் மீது காங்கேசன்துறைப் பொலிஸாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிதான் குற்றவாளியென ஒத்துக்கொண்டதைத் தொடர்ந்து எதிரிக்கு மல்லாகம் நீதிபதி 2 வருட கடுழியச் சிறை விதித்தார்.

## கிராம மக்களுக்கு குழாய் நீர் வசதி

மாத்தறை, வெள்ளி

கிராமத்திலுள்ள பாடசாலைகளுக்கும், ஆஸ்பத்திரிகளுக்கும் குழாய் மூலம் தண்ணீர் வசதியளிக்கும் ஒரு திட்டத்தை ஆரம்பிக்க உள்ளூர் ஆட்சியினர் தீர்மானித்துள்ளனர். ஆறுகள், வாவிகள், கிணறுகள் ஆகியவைகளிலிருந்து தண்ணீர். மின்சார இயந்திர மூலம் சேமிக்கப்பட்டு பின்பு விநியோகிக்கப்படும்.

## தச்சகடவை துப்பாக்கி சம்பவம்

### விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், வெள்ளி

கடந்த மாதம் 2-ந் திகதி மாவிட்டபுரம் தச்சகடவை மடத்தடி ஒழுங்கையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் சம்பந்தமாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட சகோதரர்களான சின்னத்தம்பி இராசையா, கனகரத்தினம், பாலசிங்கம் ஆகிய மூவரும் நேற்று மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி, தாமோதரம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்கள். காங்கேசன்துறைப் பொலிஸ் குற்றப்பிரிவு சார்ஜண்ட் திரு. தம்பிப்பிள்ளை அரசாங்க பரிசோதகர்கரின் அறிக்கை இன்னும் வராமையாலும், முககிய சாட்சியாகக் கருதப்பட்டு வரும் இச்சம்பவத்தில் காயமடைந்தவருமான கந்தையா நவரத்தினம் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறியபோதிலும் மூளைக்கோளாறு காரணமாக வாக்கு மூலம் அளிக்கவில்லையெனவும் இக்காரணங்களால் வழக்கை வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கும்படியும் நீதிபதியிடம் கோரினர். பொலிசாரின் வேண்டுகோளை ஏற்று நீதிபதி மேல்விசாரணையை 25-ந் திகதிக்கு ஒத்திவைத்து சந்தேக நபர்களை பழைய பிணையில் செல்லும்படியும் 25-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

இத்துப்பாககிச் சூட்டுச் சம்பவத்தில் மீனயர் கதிரவேலு ஸ்தலத்தில் மாண்டார். கந்தையா நவரத்தினம் பலத்த காயமடைந்தார்.

கொழும்பு, வெள்ளி

பொது வேலைப் பகுதியினர் செலவைக் குறைக்கும் நோக்கமாக, வீதிகளை நிர்மானிப்பதில் நவீனமுறைகளைக் கையாண்டுள்ளனர்.

## நாடகவிழா

யாழ்ப்பாணம், சனி

இலங்கைக் கலைக் கழகத்தின் ஆதரவில் யாழ் ஜெயசக்தி மன்றம் நாளை மாலை யாழ் நகரமண்டபத்தில் நாடக விழாவென்றினை நடத்தவிருக்கிறது. கலாநிதி திரு. சு. வித்தியானந்தன் இவ்விழாவிற்குத் தலைமை வகிப்பார். திருவாளர்கள் எஸ். சண்முகநாதன், எஸ். ராஜரத்தினம், கா. சிவத்தம்பி, க. செல்வரத்தினம், வைரமுத்து ஆகிய ஐந்து நடிகர்களும் ஒரு மேடையில் நடிக்கிருர்கள்.

## அரசாங்க கேள்விப் பத்திரம்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 842 — வவுனியா உப-பிரிவில் கொம்புவைத்த குளத்திற்கு நீர்ப்பாசன வசதிகள் அமைத்துக் கொடுத்தல். கேள்விப்பத்திரங்கள் 14-5-63 வரை ஏற்றுக் கொள்ளப்படும். இதன் முழு விபரங்களுக்கும் 11-4-63 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியில் 1-ம் பகுதி, 2-ம் தொகுதியைப் பார்க்கவும்-

## மரண அறிவித்தல்

நயினதீவைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை காலம் சென்றுவிட்டார். இவர் திரு. வேலுப்பிள்ளையின் மனைவியும் திருமதி விஜயகுலராணி மருதலிங்கம் (வைத்தீஸ்வர வித்தியாலயம்), செல்வி ராஜேஸ்வரி, திரு. கருணாகரன் (கொழும்பு கச்சேரி) ஆகியோரின் தாயாரும், ஆசிரியர் திரு. மருதலிங்கம் அவர்களின் மாமியாரும், திருமதி கனகசபை, திருமதி ராமச்சந்திரன், செல்வி சந்தன நங்கை, திரு. சந்திரசேகரம் ஆகியோரின் சகோதரியுமாவர். இவரது ஈமக்கிரியைகள் இன்று மாலை 2 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இந்த அறிவித்தலை ஏற்றுகொள்ளவும்.

பண்ணை ரோட்,
900 யாழ்ப்பாணம்


இப்பொழுது காண்பிககப்படுகிறது
கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்)(மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ண விஜிதா ஜெமினி
(திருமலை) (ஹட்டன் (ராகலை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

சபாஸ் சந்திரபாபு என.......
நாடும் ஏடும் வாழ்த்துகிறது
நடிப்புலகம் போற்றுகிறது
காணத்தயாராகுங்கள்



★ சந்திரபாபு,
★ எம். என். ராஜம்
★ டி. எஸ். பாலையா
★ கே. சூரியகலா
★ ரி எஸ். துரைராஜ்
★ பி. எஸ். ஞானம்
★ ஜாவர்சீதாராமன்
சி டி. ராஜகாந்தம்
★கள்ளபார்ட் நடராஜ்

மற்றும் பலர் நடித்த
சிவகாமி பிக்சர்ஸ்

குமார ராஜா

திரைக்கதை-வசனம் முரசொலிமாறன் எம். ஏ.
இசை டி.ஆர். பாப்பா
டைரக்ஷன் ஜி. கே. ராமு
நடனம் சாயி, சுப்புலட்சுமி, ஹெலன்
பின்னணி வி. என். சுந்தரம், பி. லீலா, ஜமுனாராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

மனோகரா
(யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் — சாவித்திரி
நடித்த
வணங்காமுடி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.